ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

... பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

விரோதி ஞு (1889 ஆவணி மீ உஉ ஆரம்பமானது)

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஹு மாசிமீ உகூ • (1936 மார்ச் 12) வியாழக்கிழமை { இலக்கம்— கூ௦

## தொழிலாளி--முதலாளிப் பிரச்சினை.

### முதலாளிகள் அதிகார வாஞ்சை. மூட்டைப்பூச்சிபோன்ற மனோநிலைமை.

### இலங்கையில் தொழிலாளிகள்நிலை யாது? 90000 பேர்க்குச் சோறு இல்லை.

A. K S.

I.

தொழிலாளி, முதலாளிப் பிரச்சினையே இப்போது உலகில் மிகவாக இருக்கிறது. தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையேயுள்ள தொடர்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்னும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே தற்போது உலகின்கண்உள்ள அரசியன்ஞானிகள், பொருளாதார நிபுணர் என்பவர்களின் மூளைக்கு வேலைகொடுக்கும் பெரிய வேலையாயிருக்கின்றது.

#### செல்வத்தின் காரணர்.

உலகத்தின் செல்வ நிலைக்குக் காரணர் தொழிலாளிகளே என்க; உலகின்கண் வதியும் மக்களில் 100-க்கு 99 விகிதமானோரும் தொழிலாளிகளே. ஆனால் அவர்களின் பொருளாதார நிலைமை என்ன? மிகவும் கேவலமானது என்றே கூற வேண்டும். உலகிலே பல கோடிக் கணக்கான தொழிலாளிகள் வேலையின்றித் தவிக்கின்றனர்; அவர்கள் கோக்கஞ்சிக்கு வழியில்லாது தவிக்கின்றனர். பல லட்சக்கணக்கானோர்க்கு சுகாதாரத்திற் கேற்ற வீடுவாசல்கள் இல்லை; பல லட்சக் கணக்கினர்க்கு முதிர்ந்த காலத்தில் பற்றுக்கோடு ஒன்றும் இல்லை.

#### மேனாடுகளில்

தொழிலாளிகளின் கஷ்டங்களை நீக்குதற்கு மேனாடுகளில் உள்ள அரசாங்கங்கள் தமமாலியன்றவரை பாடுபடுகின்றன என்பதை நாம மறுக்கமுடியாது; தொழிலாளிகள் வேலையிலாது தவிக்கும் காலங்களில் அவர்க்குப் பணஉதவி புரிதல், வேலைசெய்யமுடியாத வயதில் பென்ஷன்போன்ற ஓர் உபகார வேதனம் அளித்தல், குறித்த மணித்தியால நேரத்திற்குமேல் முதலாளிகள் தொழிலாளிகளிடமிருந்து வேலைவாங்க வொண்ணாதென்று சட்டம் பிறப்பித்து அநுட்டித்தல், தொழிலாளிகளின் பிள்ளைகட்குக் கட்டாய இலவசக்கல்வி, உணவு வசதிகள் அளித்தல் என்பன மேனாடுகளிலும் அமெரிக்காவிலும் கையாளப்படும் முறைகளிற் சிலவாம்.

#### ருஷியாவில்.

ருஷியாவில், இற்றைக்குப் பதினறுஆண்டுகளின்முன்னர் நிகழ்ந்த புரட்சிக்குப் பின்னர், சமதர்ம ஆட்சி நிலவத் தொடங்கியது; அதாவது செல்வர், வறியவர், முதலாளி, தொழிலாளி என்ற பேதம் பாராட்டப்படாத அரசியன் முறையே அந்த ஆட்சியாகும். ஆங்குள்ள கைத்தொழில்கள், விவசாயம் என்பன யாவும் பொது; ஒவ்வோர் வேலையாளும் ஒவ்வோர் கைத்தொழிலும் கட்டாயம் செய்யவே வேண்டும்; அவனுடைய குடும்ப சம்ரட்சணைப் பொறுப்பு அவனைச் சேர்ந்ததன்று; அது அரசியலைப் பொறுத்ததாகும். அரசினரே ஆங்குள்ள சகலர்க்கும் கோக்கஞ்சி, உடுபுடவை முதலியன அளித்தல் வேண்டும். கார்ல் மார்க்ஸ், லெனின், டால்ஸ்டாய் என்பவர்களே பொதுவுடைமைக் கொள்கைக் கர்த்தாக்களாவர்; எனினும் எமது பழைய சரித்திரங்களை ஆராய்ந்துகொண்டு போவோமானல், இந்த முறையையே, நமது பூர்விக வேந்தர்களும் அநுட்டித்துச் செவ்வனே நடத்திவந்திருக்கின்றனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். நிற்க, ருஷியாவில் அநுட்டிக்கப்படும் பொதுவுடைமை முறையைப்பற்றி அபிப்பிராயபேதம் இருக்கிறது; உலகிலே பிறக்கும்போது எவனுவது செல்வனுகப் பிறப்பது இல்லை; எவனுவது தரித்திரனுகப் பிறப்பதும் இல்லை. அன்னவரின் வாணுளிற்றான் செல்வனுய் வருதலும் வறியவனுய் வருதலும் முடிகிறது; இது ஓர் பெரும் உண்மை; செல்வமானது, ஒருவர் இருவர் வசம் இருக்கவொண்ணாது. சகலரிடமும்செறிந்திருக்கவேண்டும் அப்போதுதான் உலகம் முன்னேறும் என்பதே பொதுவுடைமையாளரின் மூலதாரக் கொள்கை; ஆனால் இந்த முறை இந்தக் கொள்கை ருஷியாவில் அநுட்டிக்கப்படும் விதம் நன்மை பயக்குமா என்பதிலேயே அபிப்பிராயபேதம் கிளம்பியிருக்கிறது. பண்டிதர் ஜவஹர்லால்நேரு ருஷிய முறையைப்பற்றி மிகவும் சிலாகித்து எழுதியிருக்கிறார். அவர் பலமுறைகளில் ருஷியாவுக்குச் சென்று அங்கேயுள்ள நிலைமையை நனகு அவதானித்தவர் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

#### இலங்கையில்.

நிற்க, இலங்கையிலும் தொழிலாளர் பிரச்சினை அதிகமாகிவிட்டது; இப் பிரச்சினையைத் திருப்தி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## கந்தர்மடம் வித்தியாசாலை.

### வித்தியா தரிசிக்குக் கடிதம்.

—o—

### ஸ்ரீ வேலுப்பிள்ளை விளக்கம்

இந்துசாதனப்பத்திராசிரியர் அவர்கள் வண்ணர்பண்ணை:

ஐயா!

வடபெரும்பாக வித்தியாதரிசி அவர்கட்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியொன்று தங்கட்கும் அனுப்புகின்றேன். அதனைத் தங்கள் பத்திரிகையிற் பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

R. M. வேலுப்பிள்ளை

கந்தர்மடம்
1936 மார்ச் 7-ம் உ

வடபெரும்பாகப்பிரதம வித்திய தரிசி அவர்கட்கு:—

ஐயா!

பிரதம வித்தியாகர்த்தர் அவர்கள் 1935-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ந் தேதி வித்தியாசாலையைப் பூட்டித் திறவாது வைத்திருந்தேன் என்றும், அம்மாதம் 22-ம் தேதி தகுதியான இரு ஆசிரியர்களையும், மாணவரையும், உட்பிரவேசியாது தடுத்தேன் என்றும், இது காரணமாகப் பெற்றோர்கள் மாணவரை வேறு வித்தியாசாலைக்கு அனுப்பிவிட்டனரென்றும் நீவிர் தெரிவித்ததன் நிமித்தம் வித்தியாசாலைப் பதிவு அங்கீகரிக்கப் படாதென்று தெரிவித்தார்கள்.

1. ஐப்பசி மாதம் 3-ம் திகதி வித்தியாசாலை பூட்டப்பட்டிருந்ததன நியாயம் 1935-ம் ஆண்டு ஜனவரிமாதம் 10-ம் தேதி உமது கந்தோருக்கு அனுப்பப் பட்ட விடுதலை நாட்களைப் பாரும். அதில் 3-ந் தேதி உட்பட்டிருந்தால் உம்முடைய அறிவித்தல் தகுதியற்றது; விடுதலை நாட்களில் பாடசாலை பூட்டப்பட்டிருந்தால் பாடசாலையைப் பதிவினின்றும் நீக்கக் கூடியவோர் நியாயமுண்டா?

2. ஐப்பசி மாதம் 22-ந் தேதி தகுதியான இரு ஆசிரியரை உட்பிரவேசியாது தடுத்தேன் என்கிறீர். தயவு செய்து இவ்விரு ஆசிரியர்களின் பெயரை அறிவிப்பீராக அதன்மேல் உம்முடைய கடிதங்களைக் கொண்டு இம்முறைப்பாடு தகுதியற்றதென நிரூபிப்பேன்.

3. பெற்றோர் பிள்ளைகளை வேறுபாடசாலைக்கு அனுப்பிய உண்மை அயற் பாடசாலைகளிலிருந்து சேர்வுப் பத்திரத்துடன் வந்து இப்பாடசாலையிற் சேர்ந்த 4 பிள்ளைகளாலும், பாலர் வகுப்பிற் சேர்க்கப்பட்ட 7 பிள்ளைகளாலும், அநுமானப்படி, (Presumption) என்மீது குற்றஞ் சாட்டித் தன்னுடைய பெயரை வெளியிடக்கூடாதென்று உம்மிடங் கேட்டு நேர் வாக்குக் கொடுத்த திருவாளர் X ம் திருவாளர் இ. செபோனம்பலம் அவர்களும், திருவாளர் சண்முகநாதன் ஆசிரிய நுதங்களாலான மட்டும் தெருக்கள் தோறும் இப்பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டாயென்று கூறித்திரியவும் தற்போது இடாப்பில 100 க்கு மேற்பட்ட பிள்ளைகள் இருப்பதனால் விளங்கும்.

4. மானேசர் திருவாளர் அருளம்பலம் அவர்கள் log Book-ல் தம்மிஷ்டம்போல் உம்முடைய அறிவித்தல்களுக்கேறபத் திகதிகளைக் கிறுக்கிநிறைவு விசேட நாவல்கள் வரைந்திருக்கின்றார். உண்மையின் பிரகாரம் இம்மூன்று குற்றங்களையும் அவர் எழுதவில்லை அநுமானப் பிரமாணத்தான் ஆசையும் பொழுது உம்மைச் சார்ந்த திருவாளர் X ன் அறிவித்தலாய் இருக்கக்கூடுமென்று நினைக்கிறன்

முன்னூர் ஓர் முறை குற்றப்பட்டு மன்னிக்கப் பெற்ற திருவாளர் வல்லிபுரநாதர் கணபதிப்பிள்ளை ஆசிரியர் ஒன்றை பொன்ற பொய்பாக்கிய இரு அசௌக்கியப் பத்திரத்தினைக் கொண்டு 32 ரூபா பெற எத்தனித்த குற்றத்தை யான் விளம்பரமாக அவருடைய, வித்தியாசாலை நீக்கப் பத்திரத்தில் (Discontinuance) கூறியிருக்கவும் அவருடைய அவ் விரண்டாம் குற்றத்தையும் மன்னித்த நீர் இப்போது மேற்காட்டிய உண்மையற்ற வீண் குற்றங்களைக் காட்டி ஓர் வித்தியா விருத்திச்சாலையை மூடச் செய்வது தங்கள் உத்தியோகக் கடமையா?

இங்ஙனம்,
தங்கள் ஊழியன்
R. M. வேலுப்பிள்ளை.

## ஜெர்மனி சந்நதம் பிரான்ஸ் பயம்.

### அபயம் என்று அரற்றும் சத்தம் ஜெர்மனியின் அபாரமான யுத்த ஆயத்தம்

### இங்கிலாந்திலும் மந்திரிகள் ஏக்கம். சர்வதேச சங்கக் கூட்ட நிகழ்ச்சி.

வெர்ஸெயில்ஸ் ஒப்பந்தத்தை நிராகரித்து, றைன்லாந்துப் பிரதேசத்தில், பிரான்ஸிய எல்லைப்புறத்துக்கு அணித்தாய்ப் படை வீரரை நிறுவ ஜெர்மனி நிச்சயித்திருப்பது பிரான்ஸ், இங்கிலாந்து என்னும் இரு தேசங்களுக்கும் மிகுந்த கலகத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஜெர்மனி பின்னால் முழங்காமம் திடீரென எல்லைப் புறத்தில் மிகத்திறமான படைகளை நிறுவியமை, பிரான்ஸைத் தாக்குதற்கே என்று பிரான்சும் இங்கிலாந்தும் அஞ்சுகின்றன.

வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை ஜெர்மனி முற்றாக நிராகரித்தமைபற்றி ஆலோசிப்பதற்காகச் சர்வதேச சங்கத்து மகாசபைக் கூட்டம் வருகிற 13-ம் தேதி (நாளைத்தினம்) கூடும். ஜெர்மனி சர்வதேசசங்கத்திலிருந்து விலகிவிட்டது எனினும், நாளைக்கூடும் மகா கூட்டத்திற்குச் சமுகம் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

#### பிரான்சும் தயார்

தனது கிழக்குப்பக்க எல்லைப் புறத்தைப் பலப்படுத்த பிரான்ஸ் இப்போது முனைந்திருக்கிறது. போர்வீரர்க்கு லீவு கொடுப்பது நிறுத்தப்பட்டுவருகின்றது.

#### பெல்ஜியமும் ஆயத்தம்

ஜெர்மனியின் யுத்த ஆயத்தத்தைக் கண்டு பெல்ஜியம் தனது எல்லைப் புறத்தை அரண்படுத்திக்கொண்டு வருகிறது

#### 10000 வீரர்

ஜெர்மன் எல்லைப்புறத்தில், இந்த 2, 3 தினங்களுக்கு மிடையிலே 10000 ஜெர்மனிய வீரர் அனுப்பப் பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

#### பிரான்சின் ஓலம்

பிரான்சும் ருஷியாவும் செய்துகொண்ட ஓர் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தியதே ஜெர்மனியின் யுத்த சன்னத்தத்திற்குக் காரணம் என்று பிரான்ஸியப் பத்திரிகைகள் ஏகோமுகமாய் ஆர்ப்பரிக்கின்றன. வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையிற் கைச்சாப்பமிட்டிருக்கும் தேசங்கள் யாவும் ஜெர்மனியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும், ஜெர்மனிமீது நிப்பந்த முறைகள் அநுட்டித்தல் வேண்டும் என்றும் 'எக்கோ டி பரீஸ்' என்னும் பிரபல பிரான்ஸியப் பத்திரிகை கூறுகின்றது.

## இரண்டரை அந்தர் கஞ்சா.

### நீதிஸ் தலத்தில் எரிக்கப்பட்டது

### மூவர்க்குச் சிறைத்தண்டனை.

பதுளைப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் அவ்வூர் R. M அப்புகாமி, முதியன் சலிஞ்ஜிலாகாமி, கிரிவத்தை என்னும் மூவரும் முறையே 50 இருத்தல், 118 இருத்தல் 126 இருத்தல் கஞ்சாவை வைத்திருந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டனர்.

நீதிபதி முதலாவதான அப்புகாமிக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் திலகாமிக்கு 3 மாதச் சிறைத்தண்டனையும் கிரிவத்தைக்கு 3 மாதச் சிறைத்தண்டனையும் விதித்து அகப்பட்ட 294 இருத்தல் கஞ்சாவையும் நீதிஸ்தல முன்றிலிலேயே எரிக்கும்படி உத்தரவிட்டார்

# தமிழிசை ஸ்வரங்கள்.

(சுவாமி விபுலானந்தர்.)

புராதன தமிழ் இசை வல்லுநர்கள் ஆரம்பத்தில் உபயோகித்து வந்தது இரு யாழ்களாகும். ஒன்று பேரியாழ்; மற்றொன்று செங்கோட்டியாழ், பேரியாழுக்கு 21 தந்திகள் செங்கோட்டியாழ் அல்லது சிறுயாழுக்கு 7 தந்திகள். கிறிஸ்து பிறக்க இரண்டொரு நூற்றாண்டுகளில் 17 தந்திகளையுடைய மகரயாழும் 14 தந்திகளையுடைய சகோட யாழும் தோன்றலாயின. கி. பி. 10 வது நூற்றாண்டிலோ அல்லது அதற்குப் பின்னரோ வாழ்ந்த கல்லாடர் என்ற புலவர் இதர நான்கு யாழ்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன:—

1000 தந்திகளையுடைய நாரதப் பேரியாழ், 100 தந்திகளை யுடைய கீசகப் பேரியாழ் 9 தந்திகளையுடைய தம்புருயாழ்; ஒரே தந்தியுடைய மருத்துவயாழ். தும்புருயாழும் மருத்துவ யாழும் வீணைபோன்றவையாகும். நூல்களில் காணும் வருணனையிலிருந்து அந்த இசைக் கருவிகள் அழகிய வேலைப்பாடமைந்தன வென்றும் விலையுயர்ந்த ரத்னங்களை அக்கருவிகளுக்குள் போட்டிருந்தன ரென்றும் அழகிய மாதர்கள் உபயோகிக்கும் யாழ்களை பட்டால் செய்த அழகிய பெட்டிகளில் வைப்பரென்றும் தெரிகிறது.

## யாழின் வருணனைகள்.

யாழின் வருணனைகளை இரு பாணாற்றுப் படைகளிலும் பொருநராற்றுப் படையிலும் மலைபடுகடாமிலும் சிலப்பதிகாரம், கல்லாடம் இவைகளிலும் விரிவாகக் காணலாம். இனி நான் கூறப்போகும் விஷயங்கள் எல்லாம் அந்த வருணனைகளையே அடிப்படையாகக்கொண்டவையாகும். பேரியாழ் கையில் தூக்கிச் செல்லக்கூடியதாகும்; பிற்காலத்து நாரதப் பேரியாழ் தும்புருயாழ் போன்றதல்ல பேரியாழ் மூன்று ஸ்தாயிகளிலும் ஏழு ஏழு ஸ்வரங்களை ஒலிக்கும் 21 தந்திகளையுடையதாகும். 7 ஸ்வரங்களுக்கு தமிழ்ப் பெயர்கள் வருமாறு:—

குரல்
துத்தம்
கைக்கிளை
உழை
இளி
விளரி
தாரம்

தாரம் என்பது சமஸ்கிருத சொல்லல்ல, சமஸ்கிருதத்திலுள்ள தாரம் என்பதற்கு வேறு பொருள் உண்டு. புராதன தமிழ் ஸ்வரங்கள் என்னவென்பதையும் அவைகளுக்கும் தற்போதுள்ள ஸ்வரங்களுக்குமுள்ள சம்பந்தம் என்னவென்பதையும் வியாதிக்கும்முன்புராம் 7ஸ்வரங்களின் தோற்றத்தைப்பற்றியும், பாணன் தமது யாழை எம் முறையில் வாசித்தான் என்பதையும் கவனிக்க வேண்டும் முதலில் தோன்றிய ஸ்வரம் தாரமென்பதாகும் இதர ஸ்வரங்கள் எவ்விதம் தோன்றினவென்பது கீழ்க்காணும் பாட்டால் அறியலாகும்:—

"தாரத்துட் டோன்று
முழையுழைட் டோன்றம்
ஒருங்குரல் குரலினுட்
டோன்றச் - சேருமினி
யுட்டோன்றத் துத்தத்துட்
டோன்றும் விளரியுட
கைக்கிளை தோன்றும் பிறப்பு"

தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும் விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றியது, தமிழ்ப் பாணன் ஒரு ஸ்வரத்தையும், இதர ஸ்வரங்களோடு கூட்டிக் கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். ஸ்வரத்தையும் அதன் பஞ்சமத்தையும் கூட்டி வாசித்த போது இனிமையான நாதம் ஏற்பட்டதைக் கண்டான். ஒரு தந்தியால் ஒரு ஸ்வரம் ஏற்பட்டால் அதன் மூன்றில் இரண்டு பாகம் அந்த ஸ்வரத்தின் பஞ்சமத்தையும் அரைபாகம், உச்ச ஸ்தாயியில் உள்ளதாவது ஸ்வரத்தையும் தோற்றுவிக்கு மென்பதை பாணன் ஆரம்பத்திலேயே கண்டு விட்டானென்று தெரிகிறது. இந்த விஷயங்கள் அடிப்படையாகக் கொண்டு இசைப்புலவனும் இசைக்கருவி செய்வோனும் சங்கீத சாஸ்திரமொன்றை சிருஷ்டித்தான்.

## தந்திநீள கணிதம்.

முதன் முதலாக பேரியாழின் 21 தந்திகளின் நீளத்தை கணித்துக் கொள்ளலாம். முதல் தந்தி 36 விரல் அளவு நீளமிருக்குமானல் 8-வது தந்தியும் 15வது தந்தியும் முறையே 18 விரல் அளவும், 9 விரலளவுமிருக்கும். 5 9, 13, 17, 21 வது இந்தத் தந்திகள் முறையே 24. 16, 10 2/3, 7 1/9, 4 20/27 விரல் அளவு இருக்கும். 16 வது தந்தி 9தாவதைவிட உச்சஸ்தாயியில் 8வது ஸ்வரமாகையாலும், 2-வது தந்தி கீழ் ஸ்தாயியில் 8வது ஸ்வரமாகையால் இவை இரண்டின் நீளம் முறையே, 8, 32 விரல் அளவாகும். இதுபோலவே இதர தந்திகளின் நீளத்தையும் கவனிக்க வேண்டும்.

## சுருதி ஸ்தானங்கள்.

பிறகு பாணன் ஸ்வரஸ்தானங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து 7 ஸ்வரங்களோடு புதிய 5 ஸ்வர ஸ்தானங்களைக் கண்டுபிடித்தான். அடுத்தபடியாக 12 ஸ்வரஸ்தானங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து மேலும் 10 ஸ்வரஸ்தானங்களைக் கண்டுபிடித்தான். ஸ்வர ஸ்தானமென்பதற்குத் தமிழில் அலகு என்பார்கள்.

கி பி 2-வது நூற்றாண்டிலேயே இந்த 22 சுருதி ஸ்தானங்களையும் தமிழர் பிடித்துவிட்டனர். ஆனல் ஆராய்ச்சி அமமட்டோடுநிற்கவில்லை. பாணன் அலகை (ஸ்ருதி ஸ்தானம்) பின்னப்படுத்திக்கொண்டே போனன், இதனல் 41 அரை சுருதி ஸ்தானங்களும் 94 கால் சுருதி ஸ்தானங்களும் 241 அரைக்கால்சுருதிஸ்தானங்களும் 388 வீச 1/8 சுருதி ஸ்தானங்களும் கண்டுபிடிக்கப்பட்டன பணனது 1000 தந்தியுடைய யாழ் அரை வீச (1/6) சுருதி ஸ்தானத்தையும காட்டியது. அந்த யாழில பெரிய தந்தியின் நீளம 84 விரல்அளவாகும்; சிறிய தந்தியின் நீளம் 32 விரல் அளவாகும்.

22 அலகுகள் அல்லது சுருதிகளைப் பாணன் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்தான்;

| | | |
|---|---|---|
| குரல் | 4 | அலகுகள் |
| துத்தம் | 4 | |
| கைக்கிளை | 3 | |
| உழை | 2 | |
| இளி | 4 | |
| விளரி | 3 | |
| தாரம் | 2 | |

மொத்தம் 22 அலகுகள்

தற்போது கர்னுடக சங்கீத சாஸ்திரப்படி அலகுகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்துள்ளனர். ச 4; ரி 3; க 2; ம 4; ப 4; த 3; நி 2.

புராதன தமிழ் இசைக் கணிதத்தின்படி மாவே முதல் ஸ்வரமாகும். இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இந்த ஸ்வரங்களை சில மிருகங்கள் பறவைகள் இவைகளின் சப்தத்தோடு தமிழர் ஒப்பிட்டுள்ளனர். புராதன தமிழரின் குரல்-மா; துத்தம்—பா; கைக்கிளை-தா; உழை—நி, இளி-சா; விளரி-ரி; தாரம்-கா

புராதன தமிழர் சோதிட சாஸ்திரத்தையும் இசைக் கணிதத்தையும் சம்பந்தப்படுத்தியிருப்பது மற்றொரு விசேஷமாகும். கீழ்க்கண்ட செய்யுள் அதனை வலியுறுத்தும்:—

இளியிட பங்கற் கடகமாம்
விளரி சிங்கம்
தளராததாரமதுவாக்-தளராக்
குரல் கோற்றனுத்துத்தங்கும் பங்
கிளையாம்.

வாலா னுழை மீனம்.

12 ராசிகளில் தமிழர் கீழ்க்கண்ட ஏழைமட்டும் தெரிந்துகொண்டனர்; ரிஷபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம், இளியை ரிஷபமும், விளரியை கடகமும் தாரத்தை சிங்கமும், குரலை துலாமும், துத்தத்தை தனுசும், கைக்கிளையை கும்பமும், உழையை மீனமும்குறித்தன.

# தொழிலாளி- முதலாளி பிரச்சினை.

(1-ம் பக்கத் தொடர்.)

கரமான முறையில் தீர்த்து வைப்பது அரசியல் வாதிகள், பொருளாதார நிபுணர், அரசாங்கசபையங்கத்தவர்கள் கடனகும். இற்றைக்கு 7 ஆண்டுகளின் முன்னர் இங்கே தொழிலாளர் நிலைமை இப்போது இருப்பதுபோல அவ்வளவு கேவலமா யிருக்கவில்லை! ஆனல் 1929 ஆண்டிலும் அதன் பின் தொடர்ந்து நிகழ்ந்த ஆண்டுகளிலும் உலகம் அனைத்தையும் பாதித்த பொருளாதார நெருக்கடியால் வியாபார மந்தத்தினல் இங்குள்ள தொழிலாளர்நிலை மிகவும் கவலைக்கிடமானதாய்விட்டது. றப்பர் கொப்பரு வியாபாரம் மங்க, தேயிலைக்கு மானம் நீங்க, அவ்வத் தொழில்களில் ஈடுபட்டோர் பல்லாயிரவர்செய்வதின்னதென்றறியாது தியங்குவாராயினர். இவர்களின நிலைமை மாற்றுதற்கு அரசினர் செய்துவந்த முயற்சிகள் யாவும் 100க்கு 1 பங்கு பயனைத்தானும் அளிக்கவில்லை எனலாம். வேலையின்மை தொழிலாளிகட் கிடையே அதிகரிக்க வகுப்புக் குரோதம் ஏற்படுகின்றது; தென் இலங்கையில் இந்தியத் தொழிலாளிகளை அமர்த்த வொண்ணுது; சிங்களத் தொழிலாளிகளையே வேலைத் தலங்களில் நியமிக்கவேண்டும என்ற கூப்பாடு பெரிதா யிருக்கின்றது; இற்றைக்குச் சின்னுட்களுக்கு முன் கொழும்பு மத்தியபகுதித் தேர்தலில், மிஸ்ரர் குணசிங்கியை ஆதரித்த சிங்களத் தொழிலாளிகளான வாக்காளர், "கொச்சியாரைக் கலைக்கவேண்டும்" என்று மிஸ்ரர் ஐயாவுக்கு ஆதரவு அளித்த இந்தியத் தொழிலாளிகளை நோக்கித் தாக்கினர் என்று செய்திகள் கூறுவதையும நாம் கவனிக்கவேண்டும். தன்னைக் கண்டு தானம் வழங்கு என்று சிங்களத் தொழிலாளிகள் கேட்கின்றனர்.

## நம் யாழ்ப்பாண நிலை.

நம் வடமாரகாணத்திலே, தொழிலாளர்நிலை மிகவும் கேவலமாயிருக்கிறது; நம் நாட்டுத் தொழிலாளிகளைப்போலப் கேவலநிலையில் இருக்கும் தொழிலாளிகள் வேறெத்தேசத்திலும் இல்லை யெனலாம். இங்கே ஒரேயொரு கைத்தொழிலாயிருந்த சுருட்டுத்தொழில் வீழ்ச்சியடைந்த பின்னர். அதனை நம்பி வாழ்ந்துவந்த பல்லாயிரவர் வேலையற்றுத் தெருத்தெருவாய்த் திண்டாடுவாராயினர். தொழில் பார்ட்ட பேர்க்கும் 30 நாட்கொண்ட மாதத்தில் 15 நாட்களுக்கும வேலை கிடைப்பது அரிதாகிவிட்டது. இற்றைக்குப் 10 ஆண்டுகளின் முன்னர் தினம் ஒன்றுக்குச் சராசரி 1 ரூபா உழைத்துவந்த தொழிலாளிக்கு இப்போது சராசரி 25 சதம் தானும் கிடைப்பது இல்லை. இந்த 25 சதத்தைக்கொண்டு அத்தொழிலாளியின் குடும்பத்தில் யார சாப்பிடுவது? யார் உபவாசம இருப்பது? அவனுடைய பிள்ளைகளின கல்விநிலை என்ன? அவனுடைய சுபதினங்கள், அசுபதினங்களுக்கு யார் செலவிடுவது? அவனுடைய முதியகாலத்தில், வேலைசெய்ய முடியாது இருக்கும் காலத்தில் அவனுடைய ஜீவனுமசத்துக்கு வழியென்ன? அவன் இறந்தால், அவனுடைய மனைவி மக்கள் கதி என்ன? இவற்றைப்பற்றி நம்மவர் யாரேனும் சிந்தித்ததுண்டா? அரசாங்கசபைத் தேர்தல காலங்களில் "பொதுஜனசேவை ஒன்றினையேகருதி அரசாங்கசபைக்குள் நுழைய விரும்புகின்றேம்" எனறு இதொழிலாளிகளின் வாக்குச்சம்மதத்தைக் கோரும் அபேட்சகர்கள் அல்லது அக்காலத்திலே புற்றீசல் போலவும், கோடைக்காலத்து மயிர்க்கொட்டிப் புழுக்கள் போலவும் கிளம்பி, மேடைகளில் ஏறி வகுப்புவாதம், தேசியவாதம பேசும தலைவர் எனத் தம்மைச் சொல்லிக்கொள்வோர் இற்றைவரை நினைத்ததுண்டா?

---

சிலப்பதிகாரத்தில் 7 இடைச்சிகள் குரவைக் கூத்தாடுகையில் மேலே கண்ட ராசிகளின் ஸ்தானங்கள் அமைந்திருப்பது போலவே வரிசையாக நிற்பார்களென்று கண்டிருக்கிறது."

# சந்தியாகுச் சுவாமியின் சாட்சியம்!

## நியாயவாதியின் விசாரணையில் நடுக்கம் மனமொத்துச் சென்ருளா?

## அச்சுவேலிப் பெண்சோரவழக்கு.

[நமது நிருபர்.]

அச்சுவேலிப்பக்கத்தமேனியைச் சேர்ந்த மேரிப்பிள்ளை என்னும் கன்னிகையைப் பலவந்தமாகக் கடத்திச் சென்றூர்கள் என்று குருசுமுத்து உட்பட ஏழுபேர் குற்றஞ் சாட்டப் பட்ட வழக்கு மீண்டும் யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் சென்ற திங்கட்கிழமைதொடக்கமாக விசாரணை செய்யப்பட்டது.

மேரிப்பிள்ளையை எதிரிகளுக்காக ஏற்பட்டிருக்கும் நியாயவாதி மிஸ்ரர் துரைசுவாமி தம்பு பின்வருமாறு குறுக்கு விசாரணை செய்தார்:—

(1ம் எதிரியைக் கூட்டில் இருந்து அழைத்து மேரிப்பிள்ளைக்குக்காட்டி) இந்த எதிரியை நீ கண்டிருக்கிருயா! —ஓம்

முன்னரிலும் பார்க்க இந்த எதிரி இப்போது தளர்ச்சியுற்றிருக்கிறன? —இல்லை

உமக்குத் தம்பரைத் தெரியும்?— ஓம்.

பொலிஸ் கோட்டில் நீ இந்த எதிரியைப் பார்த்த போது அவன் சில வருஷங்களுக்கு முன் இருந்ததிலும் பார்க்க அந்த நேரத்தில் மாறியிருக்கிறதாகக் கூறிறுய்?—ஓம், நான் அப்படிச் சொன்னேன்.

அவன் உன்னைக் காரில் தூக்கி ஏற்றும போது, அவனை நீ உண்மையில் மட்டிட்டுக் கொள்ளவில்லையா?

—காரில இருக்கும் போதே மட்டிட்டுக கொண்டேன்.

நீ தம்பர் வீட்டில் ஓர் வேலைக்காரியாகத் தான் இருநதாய்?—ஓம்.

உன்னுடைய சகோதரியும் அங்கேயே வேலைக்காரியாக இருக்கிறாள்?—ஓம்.

நீங்கள் மிகவும் வறியவர்கள்; ஆனபடியால் தான் அங்கே வேலைசெய்கிறீர்கள்?—ஓம்.

அச்சுவேலியில் வசிக்கும் ஜோன இராசாவை உனக்குத் தெரியுமா?

—தெரியும்.

தம்பருக்குச் சூசைப்பிள்ளை என்று ஓர் வண்டிக்காரன் உண்டுஅல்லவா?

—தெரியாது.

உனது தங்கச்சிக்கு அவன் அங்கே நிற்பதுதெரியும? — அவள் அங்கே வசிக்கின்றாள். அவளுக்குத்தெரியலாம் ஆனல் எனக்குத் தெரியாது.

உனக்குப் பெருந்தொகைச் சீதனம் தருவதாகச் சொல்லிச் சூசைப்பிள்ளைக்குக கலியாணம் பேசினர்கள் அலலவா? — (மறுமொழியில்லை.

உனது தகப்பனையும் தாயும்முறைப்படிவிவாகம் செய்துகொள்ளவில்லை?

—எனக்குத் தெரியாது.

சந்தியாகுச் சுவாமியை உனக்குத் தெரியும்? ஓம்.

அவர் உங்கள் சொந்தக்காரரா

—இல்லை.

அவர் அச்சுவேலியில் எவ்வளவு காலமாயிருக்கிருர்? 5 வருஷமாய் உனக்கும் உனது சகோதரிக்கும் அவரை நலலாய்த் தெரியும்? ஓம்.

அவருடைய பிரசங்கங்களுக்கு அநேக ஜனங்கள் கூடுவது வழக்கம்? —ஓம.

உன்னுடைய சகோதரியை யாரும அக்கோவிலுக்குச் சமீபமாய் தூக்கிக்கொண்டு போனல் நீ உடனே ஓடிப்போய் சாமியாருக்குச் சொல்லுவாய்?

—இல்லை வீட்டுக்கு ஓடிப்போய் பெற்றோரிடம் சொல்லுவேன்.

நீ காரில் சென்றபோது உடையாரைக் கண்டு "உடையார்ச் சிற்றப்பு" என்று அழைத்தனையோ?

—இல்லை உடையாரப்பா என்றேன்.

உடையார் உங்கள் சொந்தக்காரனு? —ஓம் என்று தான் என் தாய் சொல்லித் தந்தவ.

உன்னைத் தூக்கினபோது உனது தங்கச்சி "அக்கா, அக்கா" என்று கத்தினளோ?:— ஓம்.

நீ ஏன் அப்பொழுது அவளுக்கு வந்தனம் சொல்லிவிட்டுச் சந்தோஷமாகச் சொல்லவில்லை:—(மவுனம்)

இதன்பின் அச்சுவேலிக் கட்டளைக் குருவான வண சந்தியாகு சுவாமியார சாட்சியம் பகர்ந்தார். அவர் கூறியன வருமாறு:—

"நான்தான் அச்சுவேலிக்குரு; சென்ற 5 வருஷகாலமாக நான் கட்டளைக் குருவாய்க் கடமைபார்த்து வருகிறேன். இங்கே ஐந்து தேவாலயங்கள் உண்டு புதன்கிழமைகளில் எனது கோவிலில் கூட்டம் கூடுவது வழக்கம்; அந்தக்கோவிலில் இரு விறுந்தைகள் உண்டு.

"சகலரும் அக்கூட்டத்திற்கு வருவார்கள். இதுசம்பவம் நடந்ததினத்தன்று, நான் தேவாலயத்தில் பாவமன்னிப்புக் கொடுத்திருந்தேன். அந்நேரத்தில் ஓர் சத்தம் கேட்டது. மீண்டும அந்தச் சத்தம் கேட்டது

'முதற் சத்தம் கேட்டதும் வெளிவிறாந்தையில் நின்றவர்கள் யாவரும் ஓடிவந்தனர், இதன் பின் அன்னம்மா என்பவள் நடந்த சம்பவம் முழுவதையும் எனக்குக் கூறினள். மேரிப்பிள்ளை பலாத்காரமாகக் கடத்தப்பட்டாள் என்பதே எனது துணிபு. இது விஷயமாய் நான் உபதேசியாரிடம கேட்டதற்கு, அவர் மேரிப்பிள்ளை பலாத்காரமாகத் தூக்கிக் காரில் இடப்பட்டுக் கொண்டு போகப்பட்டாள என்று கூறினர். இந்த அக்கிரமங்களைத் தேவாலயத்து அதிகாரம் மூலமாகத் தண்டிக்க வேண்டும் எனக் கருதி அடுத்தநாள் தேவாலயத்தில் ஓர் கூட்டம் கூடுவித்தேன். அநேகர் என்முன் சாட்சியங் கொடுத்தனர். சிறிது நேரஞ் செல்லப் பொலிஸ் விதானையும் வந்தார்.

'15 நாட்களின்பின் மேரிப்பிள்ளை வந்தாள் பொலிஸ்கோட்டில் சில பொய்களைச் சொன்னதாக அவள் எனக்குக் கூறினள். "ஏன் பொய் சொன்னுய் போய் உண்மையையே சொல்" என்று அவளைப்பணித்தேன

"கடத்தப்பட்ட மேரிப்பிள்ளையை எனக்குத் தெரியும்; அவள் ஓர் நல்ல பிள்ளை அவள் கீழ்ப்படிவுக் குணமுள்ளவள்."

மிஸ்ரர் துரைசுவாமியின் குறுக்கு விசாரணை.

மேரிப்பிள்ளை விஷயத்தில் நீர் முதலில் இருந்து கடைசி வரைக்கும் அக்கறை எடுத்திருக்கிறீர் என்பதை ஒத்துக் கொள்ளுகிறீரா? — இல்லை

இவ் விஷயத்திற் சாட்சியம் சொல்ல நீர் ஏன் முன் வந்தீர்? — நீதியைப் பாதுகாப்பதற்காகவே.

மேரிப்பிள்ளை நல்லவள் என்று தான் நீர்சொல்லுவீரா? — அவட்கு விரோதமாக நான் சொல்லத் தக்கது யாதும் இல்லை

மேரிப்பிள்ளை உமக்குச் சமீபமாக வரும்போது சற்று நாணம் அச்சம் கொண்டிருந்தவளா?— இல்லை

பாவமன்னிப்புக் கொடுத்த அந்த நேரத்தில் தேவாலயம் நிறையச் சனங்கள் இருந்தார்களா? — இல்லை, 20 பெண்களும் 20, 25 பிள்ளைகளுமே இருந்தனர்.

(தொடர்ச்சி 6-ம் பக்கத்தில்.)

# பிரான்ஸின் பேரிரைச்சல்!

## ஜெர்மன் படையெடுப்பால் ஓலம்! நிர்ப்பந்தம் வேண்டுமென்று ஒப்பாரி.

## ஹிட்லர்கொடுத்த செருப்படி!

றைன்லந்துப் பிரதேசத்தில் இருந்து, வெர்ஸெயில்ஸ், லொக்கார்னோ ஒப்பந்தப் பிரகாரம் ஜெர்மனி தனது படைகளை நீக்கிக் கொள்ளவேண்டும்; அப்படிச்செய்யுமானால், படைப்பெருக்கு விஷயமாகச் சர்வதேசசங்கத்து விதிகளுக்கமைய அந்நாட்டுடன் ஓர் உடன்படிக்கைக்கு வரலாம் என பிரான்சிய அரசினர் ஓலம் இடுகின்றனர்.

### ஜெர்மன் மறுப்பு.

றைன்லந்துப் பிரதேசத்தில் ஓர் போதும் படைகளை நீக்க முடியாது என்று ஹிட்லர் ஒரேயடியாகக் கடைசி மறுமொழியைக் கொடுத்து விட்டார்.

### பிரான்ஸ் ஒப்பாரி.

இதனைக் கேட்டதும், பிரான்ஸ், தனது மூத்தண்ணனான, இங்கிலாந்து ருஷியா முதலிய நாடுகளை நோக்கி ஒப்பாரி சொல்லி ஓலமிடுகின்றது. ஜெர்மனி இப்படிச் சர்வதேசசங்கத்து விதிகளை மீறிவிட்டதால், சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த நாடுகள் ஒன்று சேர்ந்து, அந்நாட்டின்மீது நிர்ப்பந்தங்கள் விதிக்கவேண்டும், அதன் ஆக்கிரமிப்பை அடக்குதல் வேண்டும் என ஓலம் இடுகின்றது.

### பொறு! பொறு!

பிரான்சின் இந்த ஓலத்திற்கு மூத்தண்ணா இங்கிலாந்து கொடுக்கும் சமாதானம் என்ன? பொறு! பொறு! என்கின்றார் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியான மிஸ்ரர் அந்தோனி ஈடன்.

## 22000 ரூபா!

அரசாங்கசபைப் பொதுத் தேர்தலில் அபேட்சகர்களாக நின்றவர்களில் 22 பேர் குறித்த பிரமாணத் தளவு வாக்குச் சம்மதத்தைப் பெறாமையினால், தாம் ஏற்கெனவே கட்டியிருந்த பிணைப்பணமான 1000 ரூபாவையும் தனித்தனி இழந்தனர்.

## சிங்கப்பூருக்குச் சமீபமாகக் கால்வாய்

### பிருத்தானியரின் திகில்.

சியம் நாட்டு அரசினர் தமக்குரிய மலாயன் குடாவுக்கூடாக, சுவெஸ் கால்வாய் பனமாக் கால்வாய் போன்ற தாங்கிய கப்பல்கள் போக்குவரவு செய்யக்கூடிய ஒரு பெரிய கால்வாயைத் தோண்டுவதற்கான முயற்சிகள் செய்துவரலாயினர். தோண்டவிருக்கும் இக் கால்வாய்க்கு அணித்தாகப் பிரான்ஸியருக்கும் நமது ஆங்கிலேயருக்கும் உரிய நாடுகள் உண்டு. மேலும் சியம் அரசினரை இப்படிப்பட்ட ஒரு கால்வாயைத் தோண்டுங்களென்று தூண்டிவிட்டுப் பின்னுக்கு நின்று பொருளுதவி செய்பவர் ஜப்பானியரென்ற சந்தேகமும் பிறக்கின்றது. சிங்கப்பூரிலே பிருத்தானியர் ஆகாய விமானத்தைத் தாபித்திருத்தலால் தாங்களும் அப்படியான ஒரு தானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் ஜப்பானியரிடத்துப் பல வருடங்களாக உண்டு. குறித்த இக் கால்வாய் திறக்கப்படுமாயின் ஜப்பானியர் தமமுடைய இந்த மனோரதத்தையும் விரைவில் நிறைவேற்றிக் கொள்ளுதல் முடியும். மேலும் இக்கால்வாய் நிறைவேறுமானால் வங்காளவிரிகுடாவுக்கும் ஜப்பானுக்குமுள்ள தூரத்தை ஆயிரம் மைல்களாற் குறைத்துவிடலாகுமாம். சியம அரசினர் செய்யும் இந்த முயற்சி பிருத்தானியருக்கும் பிரான்ஸியருக்கும் சந்தேகத்தையும் அச்சத்தையும் விளைக்கின்றதாம்.

## நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை.

### 1935 ஆண்டின் அறிக்கை

இவ் வைத்தியசாலை, டாக்டர் V. S. இராமனுதன் L. I. M. அவர்களின் அதிகாரத்தின் கீழ் நடந்து வருகின்றது. இவர், தந்தையாரும் காலஞ்சென்ற பிரபல வைத்தியர் வைத்தியபூபதி V. சிவசுப்பிரமணிய பண்டிதரவர்களின் பின், பொறுப்பை எடுத்து நடாத்தி வருகின்றார்.

இவ்வைத்தியசாலையானது கனம் W. துரைசாமி B. A. M. S. C., Advocate அவர்களின் தலைமை கொண்ட ஓர் பரிபாலன சங்கத்தாரால் நடாத்தப்பட்டு வருகின்றது.

இங்கு வறிய நோயினர்க்கு இடவசதிகளும் இலவசமாகக்கொடுத்து வருதலால் அனேகர் இங்கு வைத்தியத்திற்கு நாடுகின்றனர்.

1935 ம் ஆண்டில் இங்கு சிகிச்சை பெற்ற பல நோயினரின் தொகை வருமாறு:—

| | |
|---|---|
| சன்னி | 2 |
| சுவாதம் | 12 |
| பிறசுரங்கள் | 415 |
| வாதம் | 43 |
| சலரோகம் | 16 |
| சோர்வாதம் | 6 |
| தொய்வு | 18 |
| கசம் | 3 |
| மேகரோகம் | 13 |
| வெட்டை | 9 |
| விற்புருதி | 460 |
| பதனழிவு ரோகம் | 2 |
| குடரிறக்கம் | 3 |
| அண்டவாதம் | 3 |
| மூலரோகம் | 4 |
| இரத்தக்ஷீணம் | 38 |
| சர்ப்பு | 3 |
| பெண்கள் ரோகங்கள் | 386 |
| குழந்தைகள் ரோகங்கள் | 420 |
| பிளவை | 143 |
| முறிவுபூட்டுப் பிசகுகள் | 1962 |
| பிறரோகங்கள் | 904 |

வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர்கள் 502, தினசரி வரவு சத்திர வைத்தியப் பகுதியில் 20 . 986. உள் நோயில் 24 . 623. இலவச மருந்துச்செலவு உத்தேசம் ரூபா 885. மருந்து வகையால் வந்தவரவு ரூபா 5577.74 செலவு ரூபா 5757. 99. இதில் யாட்கள் செலவு மாத்திரம் ரூபா 3090. என்று வைத்தியசாலைப் பரிபாலன சபைக் காரியதரிசி ஸ்ரீ கா. அருளம்பலம் எழுதுகின்றார்.

## வழிமறித்துக் கொள்ளை.

சென்ற 10-3.36 யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஆனைக்கோட்டையில் வசிக்கும் நாகன் மனைவி சின்னப்பிள்ளை அவ்வூர் (1) வேலன் (2) தம்பன், (3) காத்தி ஆகியவர்கள் தான் ஓர் குதிரைவண்டியில் தன்னுடைய புருஷன், மகள் என்பவருடன் செல்லும்போது வழிமறித்து அடித்து அட்டியல், சங்கிலி இவைகளைப் பறித்து அடித்து ஆக்கினைப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத்தொடர்ந்தாள். வழக்கு வருகிற மாதம் 2ம்தேதிக்குத் தவணையிடப்பட்டது.

## 4 ரூபாய்க்கு ஆசை 50 ரூபா அபராதம்.

தொப்பி தோட்டத்தைச் சேர்ந்த வீரன் என்னும் தொழிலாளி ஓர் கடைக்காரனை ஏமாற்றி 4 ரூபா பெற்றான் என்று குற்றம் சாட்டப்பட்டான். நீதிபதி அவனைக் குற்றவாளியெனக் கண்டு அவனுக்கு 50 ரூபா அபராதம் விதித்தார். அற்ப ஆசை கோடி தரித்திரமோ?

## உலகம் பலவிதம்.

—:o:—

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்பது பெரியோர் வாக்கு. நெல்லை விதைத்தவன் நெல்லை அரிவான்; புல்லை விதைத்தவன் புல்லை அரிவான்; "தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பர்" என்ற இவைகளெல்லாம் பழைய மொழிகளல்லவா! ஜெர்மனிய சக்கரவர்த்தியான கெய்ஸர் 1914-ம் ஆண்டில் பாரிய யுத்தத்தைத் தொடங்கியது நீதியல்ல என்பதை எவரும் ஒத்துக் கொள்வார்; ஆனால், ஜர்மனியரை இலகுவில் வெல்ல முடியாதெனக் கண்ட தத்துவராச்சியத்தவர்கள் நான்கு வருட யுத்தத்தின் பின் அமெரிக்கருடைய படையுதவியைக் கொண்டே ஜர்மனியரைச் செயித்தனர். தத்துவராச்சியங்களின் நோக்கம் ஜர்மனியரை வென்றதோடு மாத்திரம் திருப்தியடைந்ததாக இல்லை; ஜர்மனியை இனி ஒரு காலமும் தலையெடுக்கவிட வொண்ணாதென்ற வைராக்கியங் கொண்டு தத்துவராச்சியத்தனர் ஜர்மனி மீது சுயத்தைக் கூடிய கட்டுப்பாடுகளையும பணக் கடன்களையும் இறுக்க முடியாத வரிகளையும் சுமத்தினர்; ஜர்மனி அதோடு தொலைந்தது என்றுதான் அந்தக் காலத்தில் எல்லாரும் எண்ணியிருந்தனர்.

* * *

ஆனால் விஷயம் அப்படி நின்றுவிடவில்லை "கெட்டால் தலையாரோ கேடொருகால் நீங்காதோ" என்றவிதமாய், இடையறா முயற்சியுமூக்கமும அபிமானமும் உடைய சாதியினராதலால் ஜர்மனியர் தங்கள் முயற்சியாலும் அபிமானத்தினாலும் இரண்டாமுறையுந் தலையெடுக்கலாயினர். ஹிட்லர் என்று சொல்லப்படும் ஒரு தீரபுருஷன் ஜர்மனிய சர்வாதிகாரியாக வந்து வெளிப்பட்டார்; ஜர்மனியின் கௌரவத்தையும் சுவதந்திரத்தையும் பழையபடி நிலைநாட்ட வேண்டுமென்பதே அந்தத் தீரபுருஷனுடைய பிரதானநோக்கம் தன்னுடைய தாய் நாட்டைத் தலையெடுக்காதபடி பகைவர்கள் பலவகையாகக் கட்டியிருக்கும் கட்டுக்களை ஒன்றொன்றாக அறுக்கத் தொடங்கினன்; அதனைக் கண்ட பகைவர்களாகிய தத்துவ ராச்சியத்தினர் இதற்கெனக் கூட்டியுள்ள சர்வதேச சங்க மூலமாக ஜர்மனியரைக் கண்டித்து வெருட்ட முயன்றனர்.

* * *

இந்தியா, இலங்கைபோன்ற கீழைத்தேச நாட்டினரென்றால் அவர்கள் செய்த வெருட்டுக்குப் பயந்து அடங்கி யொடுங்கியிருப்பார்கள். பட்டிணத்து நரி சலசலப்புக்கு அஞ்சுமா? ஹிட்லர் என்ற அந்தத் தீரன் தன் வலியையும் மாற்றான் வலியையும் ஆராய்ந்து கொண்டு, அவர்களோடு எதிர்த்து நின்று கட்டுப்பாடுகளையுந் தவிர்த்து ஈற்றில் அவர்களுடைய கட்டுப்பாடுகளெல்லா வற்றையும் உதறியெறிந்துவிட்டு அவர்களுடன் போர்க்கு அறை கூவி நிற்கின்றான்; இப்பொழுது தத்துவ ஆராய்ச்சியங்களுக்கிடையே பெருஞ் சிக்கலையும்; பாரிய ஐரோப்பிய யுத்தம் இன்னுமொன்று விரைவில் நிகழுமொன்ற நிலையும் ஏற்படலாயின. "ஓடம் வண்டியில் ஏறுவதும் வண்டி ஓடத்தில் ஏறுவதும்" சகசந்தானே தத்துவராச்சியங்கள் உழைத்தேயங்கட்கு ஆதியிற் செய்த பழைய வினையை இப்பொழுது அனுபவிக்கப் போகின்றன போலும். என்று தேசசரித்திர ஆராய்ச்சியாளர் பெருமூச்சோடு சொல்லுகின்றார்கள்.

# இதன் இரகசியம் என்ன?

## ருஷியா—துருக்கி உடன்படிக்கை. இருநாடுகளுக்குமிடையே சினேகம்.

## துருக்கியின் யுத்த ஆயத்தம்.

முன்னர் இருந்ததைக் காட்டிலும், இது சமயம் துருக்கிக்கும் ருஷியாவுக்குமிடையே நட்பு இன்னமும் அதிகரித்துக் கொண்டே போய்க்கொண்டிருக்கின்றது. 'இந்தச் சிநேகம் ஒரு நல்ல தோற்றத்தில் பகிரங்கமாய்க் காணப்படலாம் என்று உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. துருக்கியும் ருஷியாவும் தங்களுக்கிடையே சினேக சம்பந்தத்தை மேன்மேலும் அதிகப்படுத்திக் கொள்ளுவான் வேண்டி பற்பல முறைகளைக் கைக்கொண்டு வருகின்றன. இதற்கொப்ப, மார்ச் மாதத்தில் ருஷியா, ஒரு காட்சி விழா ஒன்றை நடத்த வேண்டும் என்றும் அதில் துருக்கியர்களால் தயார் செய்யப்படும் பொருள்களை மட்டுமே காட்டப்படுமென்றும் தீர்மானித்திருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் இது சமயம் மாஸ்கோ நகரில் நடைபெற்று வருகின்றன.

இவற்றுடன் நில்லாமல், சோவியத் ருஷியா கம்பியில்லாமல் ஒலி பரம்பும் நிலயம் ஒன்றை நிர்மாணித்திருக்கின்றது. இதன் மூலம் ருஷியாவினின்றும் பற்பல விஷயங்களைத் துருக்கியில் பரப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. துருக்கியும் இதற்கிணங்க ஒலி பரப்பும் ஒரு பெரிய நிலத்தை ஏற்பாடு செய்திருக்கின்றது. மேலும் இவ்வாண்டு மத்தியில் ருஷ்யாவில் சோவியத் யூனியனின் பிரமாண்டமான கொண்டாட்டமொன்று நடைபெறப் போகின்றது. எனவே, இதில் கலந்து கொள்ளுவதற்காகத் துருக்கி அரசாங்கம் தன்னுடைய பிரதிநிதிகளை யனுப்பிவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றது.

### துருக்கி யுத்த தளவாடம்.

துருக்கிக் கடற்படை இலாக்கா தன்னுடைய யுத்த பலத்தை இன்னமும் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இதற்காகப் பாராளுமன்றம் ஒருகோடித் துருக்கிபவுன் அனுமதிக்க வேண்டுமென்று கோரியது. இக்கோரிக்கையைத் துருக்கிப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டுவிட்டது. பின்னர் எப்படிப்பட்ட கப்பல்கள் வாங்கவேண்டும்? அல்லது தயார் செய்ய வேண்டும் என்னும் விஷயத்தைத் துருக்கி அரசினர் கவனித்து வருகின்றனர். இது முடிந்ததும், இதைப் பல பாஷைகளிற் பிரசுரம் செய்து பல அரசாங்கங்களுக்கு அனுப்பி அவர்கள் கொடுக்கும் டெண்டரைத் துருக்கிய அரசாங்கம் கவனித்துத் தனக்குச் சகாயமாயுள்ளவர்களால் இக் கப்பல்களைத் தயார் செய்து பெற்றுக் கொள்ளும்.

## ஸ்தானமிழந்தோர்!

### 18 பேர் பதவியிழந்தனர்.

### பழையவர்கள் சதி.

பழைய அரசாங்கசபை அங்கத்தவராயிருந்து பொதுத்தேர்தலில் அபேட்சகராக நின்றவர்களில் பின்வரும் 18 பேரும் தோல்வியுற்றனர்.

1. மிஸ்ரர் E. W. பெரேரா (ஹொரண)
2. ,, D. J. விமலசுரேந்திரா (இரத்தினபுரி)
3. ,, W. H. D. ஜெயசுந்தரா (நாரம்மலை)
4. ,, A. பொலேஸ் கோடன்(பண்டாரவளை)
5. ஸ்ரீ. M. M. சுப்பிரமணியம் (திருக்கோணமலை)
6. மிஸ்ரர் G. A. டீ. சொய்சா (பலப்பிட்டிய)
7. ,, P. B. ரணராஜா (கல்கெதிர)
8. ,, W. T. B. கரியலாடை (மாத்தளை)
9. டக்டர் E. A. கூரே (கொழும்பு தெற்கு)
10. மிஸ்ரர் நெவின்ஸ் செல்வந்துரை (ஊர்காவற்றுறை)
11. ,, T. G. ஜெயவர்த்தன (பலாங்கொடை)
12. ,, T.B. பணபொக்கை(கம்பளை)
13. ஸ்ரீமதி அடலின்மொலமுரே (ருவான்வலை)
14. மிஸ்ரர் F. A. உபயசேகா (அவிசாவலை)
15. சேர் H. L. டீ. மெல் (புத்தளம்)
16. டக்டர் S. A. விக்கிரமசிங்கி (மொறவாக்கை)
17. G. K. W. பெரேரா (மாத்தறை)
18. V. S. டீ. S. விக்கிரமநாயக்கா (அம்பாந்தோட்டை)

## கழுதாவளையில் குதூகல வரவேற்பு.

மட்டக்களப்புத் தென் பகுதிக்கு அரசாங்கசபை அங்கத்தினராய்த் தெரியப்பட்ட ஸ்ரீமான் S O கனகரெத்தினம் அவர்களைக் கழுதாவளைக் கிராம வாசிகள் மிகுந்த குதூகலத்துடன் வரவேற்றுபசரித்தனர்.

இம் மீ 4-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஸ்ரீமான் S. O. கனகரத்தினம் அவர்களும் பாரியாரும் திரு வே. பொன்னுச்சாமி வன்னிமை முதலியாரவர்கள் இல்லத்தண்மையில் பூமாலை சூட்டப் பெற்று மேளவாத்தியங்கள் கோஷிக்க வெடி குரவையான ஆதிபன ஆர்ப்ப இனிது வரவேற்கப்பட்டனர். பின் அங்கிருந்து சிறிது தூரத்திற்கப்பாலுள்ள வாசிகசாலை வீதியில் அதி விசித்திரமாயலங்கரிக்கப்பட்டிருந்த பூர்பந்தரின் கீழ் அனைவரும் குழுமினர் அவ்விடத்தில ஸ்ரீ கணேசானந்த சபையாரால் ஓர் பூமாலை சாற்றப்பட்டது. பின்பு திரு வே. பொன்னுச்சாமி வன்னிமை முதலியார், திரு பண்டிதர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை, திரு சி. கண்ணமுத்து ஆசிரியர் திரு D M. பூபாலபிள்ளை ஆசிரியர் ஆகிய பெரியார்கள் நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசாங்க சபையில் ஆற்றவேண்டியவை எவை என்பவற்றைத் தெளிவாயும், சுருக்கமாயும் பேசினர்.

அப்பால் ஸ்ரீமான் S. O கனகரத்தினம் அவர்கள், மேற்கூறியவர்கள் தமக்காகச் செய்த பெரு முயற்சிகளையும் ஸ்ரீ கணேசானந்த வாசகசாலையினால் கிராமமடையும் முன்னேற்றத்தையுப் பாட்டுபார்ச்சி குறித்துத் தம்மாலானவரையில் உதவிபுரிந்துழைப்பதாகவும் பேசி முடித்தனர்.

பின்னர், சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்றதும் கூட்டம் இனிது கலைந்தது.

இதுபோன்ற வரவேற்புபசாரணைகள் ஒவ்வோர் கிராமங்களிலும் உள்ள தமிழ் மக்களால் அதி விமரிசையாக நடத்தப்பட்டன.

—கடிதம்

## சமாதானம் வருமா?

ஜனாப் M. A. ஜின்னா அவர்கள் சாகித்கஞ்ச் தகராறு விஷயமாகச் சென்றவாரம் பல சீக்கியத் தலைவர்களைக் கண்டு சம்பாஷித்தார் சமாதானப்பேச்சு என்ன நிலைக்கு வந்துவிட்டதென்பது தெரியவில்லை ஆனால், சீக்கியர்கள் மசூதியை இடித்த இடத்தில் மேற்கொண்டு கட்டிடம் கட்டாமல் இருப்பதாக உறுதிமொழி யளித்துத் தங்களது செயல் முஸ்லீம்களது மதவுணர்ச்சியை எவ்விதத்திலேனும் புண்படுத்தியிருந்தால் அதற்காக வருந்தம் தெரிவிப்பதாகப் பகிரங்கமாகக் கூறச் சம்மதித்தால் சமாதானம் ஏற்படுமெனத் தோற்றுகிறது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவ௵
மாசி௴ ௨௯ வியாழக்கிழமை.

## ஹிட்லர் இட்ட வெடிகுண்டு.

இத்தலியர் அபிஸீனியர்மீது பலாத்காரமாக அவர்களுடைய நாட்டுட் படையெடுத்துச் சென்று அவர்களுடன் சமர்போர, தம் நாட்டினையும் மானத்தினையும் பாதுகாக்கும்படியே இப்பொழுது அபிசீனியர் கோரமான யுத்தத்தைச் செய்கின்றனர். மேலும் அபிஸீனியச் சக்கரவர்த்தி இற்றலியரிடமிருந்து தம் நாட்டைப் பாதுகாத்துத்தரவேண்டுமென்றும் தமக்கு இந்தச் சமையத்திலே துணைபுரிய வேண்டுமென்றும் ஒருமுறை இருமுறையன்று பலமுறை இரந்துகேட்டனர். அச்சக்கரவர்த்தியின் வேண்டுகளுக்கெல்லாம் சர்வதேசசங்கத்தார், பிச்சைக்காரனுக்குச் சடன்சொன்னவாறுக, தவணை சொல்லிக் கடத்தி வரலாயினர்.

ஆனல் இந்தச் சர்வதேச சங்கத்திற்கு இப்பொழுது தவணைசொல்லிக் கடத்தித் தப்பிக்கொள்ள முடியாத ஒரு பெருஞ் சங்கடம் ஏற்பட்டிருக்கின்றது. என்னவெனில், ஜர்மனிய சர்வாதிகாரியாகிய ஹெர் ஹிட்லர் வேர்ஸேயில்ஸ் மகாநாட்டில் ஜர்மனியருக்கு விரோதமாகச்செய்த கட்டுப்பாட்டைப் பொருட்படுத்தாமல் றையின்லண்ட் என்னும் எல்லைநாட்டுள் தமது சைநியங்களை அனுப்பியதேயாகும்.

இந்த றயின்லண்ட் என்னும் நாடு பிரான்சிற்கும் ஜர்மனிக்கு மிடையே எல்லையாக வுள்ளது ஜர்மனியின் சுவாதீனத்திலேயே இப்பொழுதும் இருப்பது. ஆனல் இவ்வெல்லை புறநாட்டில் ஜர்மனியர் சர்வதேச சங்கத்தின் அநுமதியில்லாமல் எக்காலத்தாயினும் தம் சைநியத்தைக்கொண்டு போய் நிறுத்தவொண்ணு தென்பதே வேர்ஸேயில்ஸ் மகாநாட்டில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் ஒன்றாகும்; இக்கட்டுப்பாட்டை இப்பொழுது ஹிட்லர் உதறியெறிந்துவிட்டு குறித்த றயின்லண்டுள் பெருந்தொகையான சைநியத்தைப் புகுத்தி நிறுத்தியுள்ளார். இப்படித் தாம் செய்யப்போவதாக ஹிட்லர் செய்யுமுன் எவர்க்காயினும் சொன்னதாகவுந் தெரியவில்லை, ஹிட்லர் செய்த இச்செய்கை தத்துவ ராச்சியங்களையும் ஏனைய ராச்சியங்களையும் காத்திராப்பிரகாரஞ் சிந்தனைக்குள் ஆக்கிவிட்டது. ஜர்மனிய சர்வாதிகாரியின் இச் செயலையிட்டு பிரான்சியர் பெல்ஜியர் பிருத்தானியருடன் யோசிக்கலாயினர். ஆனல் ஜர்மனிய அதிகாரிகளெனிலோ தங்கள் நாட்டின சுவதந்திரத்தையுங் கௌரவத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்ற நிச்சயத்துடன்றான் கருமம் ஆற்றத் தலைப்பட்டிருக்கின்றனர். இனி றயின்லந்துள் ஜர்மனிய பட்டாளம் புகுந்தபோது அப்பட்டாளத்தாரை அந்நாட்டுள்ளார் மிக்க ஆதரவோடும் ஆநந்தத்தோடும் வரவேற்றனராம். இதனுலே ஹிட்லருடைய செல்வாக்கு எப்படிப்பட்டதென நன்கு அறியக்கிடக்கின்றதல்லவா? ஹிட்லர் கொண்டகோலத்தைத் தடுத்து இன்னமுஞ் சிலகாலத்திற்காயினும் ஐரோப்பாக்கண்டத்தைச் சமாதானத்தில் வைக்கலாகுமோ என்றல், ஒருவாறு செய்தலும் முடியும். எங்ஙனமெனில், பிரான்ஸியரும் பெல்ஜியரும் எல்லைப்பிரதேசமாயுள்ள குறித்த சில இடங்களில் நிற்குஞ் சைநியத்தைத் தவிர்த்துவிடல் வேண்டுமென்பதே ஜர்மனிய சர்வாதிகாரி இப்பொழுது நிகழ்த்தும் ஆசங்கையாதும். ஆனல் இதற்கு பிரான்சியர் பெல்ஜியர் உடன்படுவரோ என்பது சந்தேகம்.

இப்பொழுது ஜர்மனியில் உண்டாயிருக்கும் கிளர்ச்சியெனிலோ இவ்வளவில் மாத்திரம் நின்று விடுவதன்று; இந்தக் கிளர்ச்சிக்கு மிகவும் ஆழமான அடிப்படையோடு கூடிய காரணங்கள் உண்டு. சர்வதேச சங்கமானது உலகசமாதானத்தைக் காப்பாற்ற ஆற்றலற்றதென்பதைச் சீன—ஜப்பானிய யுத்தத்திலும் இற்றலிய — அபிஸீனிய யுத்தத்திலுங் காட்டிவிட்டது ஆனதால் அச்சங்கத்தில் எல்லார்க்கும் அவநம்பிக்கை ஏற்படலாயிற்று. சர்வதேசசங்கத்தின் சதி இவ்வாறுக, விரைவில் ஒரு பயங்கரமான யுத்தம் ஏற்படப்போகின்றதென்ற திகிலே உலகம் முழுவதும் இப்பொழுது பரந்துகிடக்கின்றது; இந்த விஷயத்தில் நடப்பதை இருந்து காண்பதன்றி நாம் சொல்லத்தக்கது வேறு யாதும் இப்போதைக்கு இல்லையாம்.

## பிரான்சின் ஒப்பாரி.

ஜெர்மனியின் படையெடுப்பைக் கண்டு பிரான்ஸ் ஒப்பாரி சொல்லி, அண்ணன்வா, தம்பிவா என்று மற்றும் தேசங்களை நோக்கிக் குரவையிடுகின்றது. புத்தூக்கும், புத்துணர்ச்சியும் கொண்டுள்ள ஜெர்மனி தனமீது வல்லரசுகளால் சுமத்தப்பட்ட வெர் ஸெயில்ஸ், லொக்கார்னே உடன்படிக்கைகளை உடைத்தெறிய முனைவது ஆச்சரியம் அல்ல என்பதே உலகினக் கணிதான புத்தியுடையார் எவரதும் அபிப்பிராயமாகும். ஆனல் ஒன்று; சர்வதேசசங்கத்து விதிகளை ஜெர்மனியானது — அச் சங்கத்தை விட்டு விலகியுள்ள ஜெர்மனி — மீறிவிட்டு அக்கிரமம் புரிகின்றது என்ற காரணத்தினுல், அதன் மீது நிர்ப்பந்தம் விதிக்கவேண்டும், அதனை மற்றும் தேசங்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று பிரான்ஸ் ஒப்பாரி கூறுகிறது. ஆனல், இப்போது நீதி, நியாயம் பேசும் இதே பிரான்ஸ் இற்றலிய - அபிஸீனியப் பிணக்கில் என்னமாதிரி நடந்திருக்கிறது?

இற்றலி சர்வதேச சங்கத்து விதிகளை மீறி, அச் சங்கத்தையே சதம் என நமபி இற்றைவரை கர்மம் ஆற்றி வரும் அபிஸீனியாவுக்குள் ஆக்கிரமித்தது: இற்றலி செய்தமை முழுப்பிழை என்பதைச சர்வதேசசங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது: ஆனல் அப்படிப் பிழைசெய்த இற்றலியைக் கண்டிக்க, அதன் ஆக்கிரமிப்பை, அதிகாரத்தை, போர்வெறியை அடக்கச் சர்வதேசசங்கம் இற்றைவரை செய்ததென்ன? எண்ணெய் நிர்ப்பந்தம் ஒன்றினுல்தான், இற்றலியைப் பணிய வைக்கலாம் என்பதைப் பிரான்ஸ் நன்கு அறியும்; அப்படிச் செய்வதே நீதியுமாகும் என்பதையும் உணரும்: அப்படியிருந்தும், அந் நிர்ப்பந்தத்தினைச் சங்கம் விதிக்க, இந்தப் பிரான்ஸ்தேசம் முட்டுக்கட்டையிட்டது: சர்வதேசசங்கத்தின் அதிகாரத்தைக் குறைக்க, அதன்மீது உலகோர்க்கு அவநம்பிக்கையையும் வெறுப்பையும் கொடுத்த இதே பிரான்ஸ், நிர்ப்பந்தங்களை ஜெர்மனிக்கு விரோதமாக விதிக்கும்படி கதறுகின்றது, அந்தோ! இந்த வெள்ளை வல்லரசுகள் தமக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் கூறும் சுயநல மனப்பான்மையை என்னென்றெடுத்துரைப்பது?

### பொன்னுச்சிக்கு 600 ரூபா அபராதம்.

மயிலிட்டியில் வசிக்கும் முருகுப்பிள்ளை பெண் பொன்னுச்சி என்னும் பெண் 1½ இறுத்தல் நிறை கொண்ட அபினுடன் யாழ்ப்பாணம் புகையிரத ஸ்தானத்தில் மதுப்பரிசோதகர் D. S. நதானியல்ஸ் அவர்களாற் சிறையாய், சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டாள்.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு அவளுக்கு 600 ரூபா அபராதம் விதித்தார். தண்டனை விதித்தபின், நீதிபதி அவளை நோக்கி, "பெண்களும் அபின், கஞ்சா முதலாம் பொருள்களை வியாபாரஞ்செய்யும் வழக்கம் இங்கே அதிகரித்து வருகின்றது. இதனைத் தடுத்தற்காகவே, உன்மூலம் மற்றும் பெண்களுக்கும் ஓர் பாடம் படிப்பதற்காகவே இவ்வளவு அதிக அபராதம் விதிக்கிறேன்" என்று கூறினர்.

# கண்ணோட்டம்.

### தொழிலாளர்க்கு.

ஓர் தேசம் சுபிட்சமடைய வேண்டுமானல், அந்நாட்டின் முதகெலும்பனைய தொழிலாளர் திருப்தியுடன் வாழவேண்டும்: இது உண்மை ஆனல் எமது நாட்டிலுள்ள தொழிலாளிகளின் நிலைமை உண்மையில் மிகவும் கேவலமானதாகும் அவர்களைப் போலக் கேவல நிலையில் உள்ளவர்கள் உலகில் வேறெங்கும் இல்லையெனலாம். இக்கேவல நிலைக்கு மூலகாரணம் எமநாட்டுத் தொழிலாளர்க்கிடையே ஒற்றுமையின்மையே என்று கூறுதல் மிகையாகாது. இவ்வொற்றுமையின்மைக்குக் காரணம் கல்வியின்மையாகும்: எனவே எமநாட்டுத் தொழிலாளிகளின் கேவலநிலைமைக்கு மூலகாரணம் யாரெனில் அரசினரேனினும் அமைப்பும் ஓர் அந்நிய அதிகார வர்க்கத்தினுல் தான எம் நாடு முன்னேறவில்லை என்று இதுகாறும் சிலர் குறை கூறி வந்தனர். ஆனல் கல்வி, போன்ற சில விஷயங்களில், எமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறபடியால், இனியும் பிரிட்டிஷாரை நாம் குறை கூறுதல் முடியாது. நமது அரசாங்கசபைப் பிரதிநிதிகளாயுள்ளார் ஏழைத் தொழிலாளர் சுபிட்சமடைய வழிதேடுவார்களா? அவர்களின் கான்முளைகட்குக் கட்டாய இலவசக்கல்வி அளிப்பார்களா? ஏழைத் தொழிலாளிகளின பிள்ளைகள், கல்வி பயிலும் காலத்தில் மதியான நேரத்தில் அவர்கட்கு இலவச உணவு அளிக்க வசதி செய்வார்களா?

### சிங்களரின் பதவிவேட்டை.

நமது கொழும்பு நிருபர் சிங்களத் தலைவர்களது பதவிவேட்டை சம்பந்தமாக எழுதியுள்ள கட்டுரையினை இற்றைப் பிரசுரத்தின் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கிறேம். தேச இலங்கையில் இருந்து இங்கு வரும் செய்திகளில் இருந்து, நம நிருபரின அபிப்பிராயத்திற்கு ஆதாரம் இல்லை என்று நிச்சயமாக நம்பவேண்டியிருக்கிறது. மந்திரிப்பதவிகள் நம் நிருபர் கூறுகிறபடி வழங்கப்படுமானல், அதனைப்போல இலங்கை மக்களுக்கு ஆபத்து தரக்கூடியது பிறிதொன்றும் இல்லையெனத் திடமாய்க் கூறலாம். பக்கிரபபதவிகள் என்பன கீழ்நாட்டுச் சிங்கள மகாசபையைச் சேர்ந்த ஓர் சிலர்க்குத்தான் சீதனம், அல்லது முதுசொத்து என விளங்கிக்கொள்ளவொண்ணுதென்பதனை ஏற்கனவே நாம் சிங்களத்தலைவர்க்கு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேம் மந்திரிப் பதவிகள் வழங்கப்படும் போவழிகளிலும் பார்க்கப் பலவிதத்திலும் சிறந்த பிரதிநிதிகள் சிறுபான்மையினரால் இப்போது தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர் என்பதனைச் சிங்கள பக்கள் நன்கு உணரவேண்டும் அரசாங்கசபையில் திறமை, அநுபவம், அரசியலஞானம், கல்வி, பொருளாதார நிபுணத்துவம் என்பன யாரமையப் பெற்றிருக்கின்றனரோ அவர்கட்கே மந்திரிப்பதவிகள் வழங்கப்படல் வேண்டும். அஃதின்றி சேனநாயக்கா, ஜெயதிலகாக் கோஷ்டியார் எண்ணப்படி மந்திரசபை அமைக்கப்படுமானல் எமது நாட்டிற்கு ஒருபோதும் சுதிமோட்சம் கிடைக்கமாட்டாது ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமையும், விசுவாசத்திற்குப் பதிலாக அவநம்பிக்கையுமே தாண்டவமாடும். அதன் பயனக இலங்கையின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை ஏற்படும். அப்படியான ஓர் நிலைமை ஏற்படுமானல் அதற்குப் பொறுப்பாளிகள் சுயநலப்புலிகளான சிங்களத் தலைவர்களே யாவர் என்பதை நாம் கூறத் தேவையில்லை.

# கேம்பிரிட்ஜ் பரீட்சை.

## ஸீனியர்ப் பரீட்சையில் 100க்கு 26 விகிதம்.

### பெறுபேற்றின் விவரச்சாரம்.

சென்ற டிசெம்பர்மாதம் நிகழ்ந்த கேம்பிரிஜ் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாய்விட்டன.

இலங்கையில் எல்லாமாக 753 ஆண்களும் 269 பெண்களும் ஸீனியர்ப் பரீட்சைக்குத் தோற்றினர். ஆனல் 198 ஆண்களும் (100க்கு 26 விகிதம்) 127 பெண்களும் (47 விகிதம்) சித்தியெய்தினர்.

ஜூனியர்ப் பரீட்சைக்கு 1142 ஆண்களும், 352 பெண்களும் தோற்றினர். ஆனல் 626 ஆண்களும (55 விகிதம்), 252 பெண்களும் (72 விகிதம்) சித்தியெய்தினர்.

1934-ம் ஆண்டிலும் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் தொகை 3112. 1935-ம் ஆண்டு மாணவர்கள் தொகை 3004.

வடமாகாணத்துச் சைவக் கல்லூரிகளின பெறுபேறு வருமாறு: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பெறுபேறு இற்றைப்பிரசுரத்தின பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

#### ஸீனியர்ப் பரீட்சை.

பரமேஸ்வரக்கல்லூரி.

(1) N. மகாதேவா (2) W. R. கல்லையா (3) C. ஜெயரத்தினம் (4) P. சிவஞானம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(1) J. P. நவரத்தினம், (2) K. விஸ்வலிங்கம்.

காவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி.

(1) A. P. P. காந்தி (2) S. சிவகுரு (3) K. சிவசிதம்பரப்பிள்ளை (4) S. வேலுப்பிள்ளை.

விக்ரோறியாக் கல்லூரி.

(1) S. கணேசரத்தினம், (2) C. முருகேசு (3) V. முதலித்தம்பி (4) S. இராஜநாயகம் (5) K. துரைசிங்கம்.

இராமநாதன் கல்லூரி (பெண்கள்)

(1) S. சபாபதி, (2) V. தில்லையம்பலம்.

#### ஜூனியர்ப் பரீட்சை.

பரமேஸ்வரக்கல்லூரி.

(1) A. ஆறுப்பிள்ளை (2) V. கனகசபாபதி (3) R. மகேஸ்வரன் (4) A. மாசிலாமணி (5) S. முத்தையா (6) V. நாகரத்தினம் (7) K. பாலசிங்கம் (8) K. இராஜரத்தினம் (9) C. இராசையா (10) P. சபாரத்தினசிங்கம் (11) S சிவபூஷன் (12) T. சிவராஜா (13) S. சிவசுப்பிரமணியம் (14) K. சிவசுப்பிரமணியம் (15) R. சிவசுப்பிரமணியம் (16) S. S. சுப்பிரமணியம் (17) K சுப்பிரமணியம் (18) M. திருச்செல்வம் (19) S. திருநாவுக்கரசு (20) T. துரைரத்தினம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(1) N. பாலசுப்பிரமணியம் (2) G. W. ஜெயசிங்கம் (3) P. ஜெகநாதன் (4) R W. குலநாயகம் (5) K. மதியாபரணம் (6) E. R. போல் (7) P. இராஜலிங்கம் (8) D. B இராமநாதன் (9) V. இராஜேந்திரம் (10) S. செல்வநிநாதன் (11) C. சின்னத்தம்பி (12) S. வேலும்மயிலும்.

இராமநாதன்கல்லூரி (பெண்கள்)

(1) S. இளையதம்பி (2) M. கனகசபை (3) C. இராமநாதன் (4) J. சிங்கம் (5) S. சின்னத்தம்பி (6) M. தம்பிப்பிள்ளை (7) N. தம்பு (8) R. வேலுப்பிள்ளை.

## செய்யவேண்டியது என்ன?

### யாழ்ப்பாணம் சுருட்டுத்தொழிற் சங்கம்

### அதன் கடமைகள்

(ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமி B A.)

யாழ்ப்பாணச் சுருட்டுத்தொழிற் சங்கம் என்னும் ஓர் சங்கத்தை நிறுவி அதன் மூலம் சுருட்டுத் தொழிலைப் பழைய நிலைக்குக் கொண்டுவா அபிமானிகள்சிலர் முயற்சிக்கிறார்கள். அத்தகைய சங்கத்தால் எவ்வாறு சுருட்டுத் தொழிலைச் சிறப்பிக்கலாம் என்பதைக் கீழே சுருக்கமாக வரைகிறேன்.

(1) புகையிலையை ஒரே நிதானமான விலைக்கு வாங்க வியாபாரிமார் எல்லாரையும் ஐக்கியப்படுத்துதல்.

(2) சுருட்டைத் தற்கால முறைக்கேற்பத் தயாரித்தல்; கோடா இல்லாமல் ஒட்டுச் சுருட்டு மாதிரிச் சுருட்டி லேபல் தேவையாயின் லேபலையும் இட்டுச் சிறுபெட்டிகளில் தனித்தனிச் சுருட்டாக அடுக்கி விற்றல்.

(3) இப்படித் தயாரித்த சுருட்டு மற்றைய தேசங்களில் செய்யப்படும் சுருட்டுகளிலும் இளக்கமாக இருக்கமாட்டாது. ஆகவே ஏனைய தேசங்கட்கும் எங்கள் சுருட்டை அனுப்புவதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் தேடுதல்.

(4) நாம் புகையிலையைக் கறுப்பு நிறமாக உலர்த்தாது, சிவப்பு நிறமாக உலர்த்தவேண்டும் இது பின்பு யோசிக்க வேண்டிய விஷயம். மேற்காட்டிய மூன்று விஷயங்களும் உடனே கையாளப் படவேண்டும். புகையிலையைச் சிவப்பாக உலர்த்துவதற்கு முன் எங்கள் நாட்டில் எவ்வித சிவப்புப் புகையிலை விதை அதிகஞ் செழிப்பாக விளையுமோ அதையே நாட்டி அப் புகையிலையைச் சிகப்பு நிறப் புகையிலையாக உலர்த்தி அதன்பின் சுருட்டையும் சிவப்புச் சுருட்டாகத் தயாரிக்கலாம்.

### கிராமபோன்மூலம் சாட்சியம்.

'ஸெக்கோஸ்லேவாக்கியா வைச் சேர்ந்த ஒபாவா என்ற விடத்திலுள்ள கோட்டில் ஸமானதொரு வழக்கு விசாரணை நடந்தது. இவ்வழக்கில் ஆண்டன் மேயர் என்பவர் ஸெக்கோஸ்லேவாகியக் குடியரசு அரசினரையும் அதன் ஜனாதிபதியையும் நிந்தித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இவ்வழக்கில் 2 ஜெர்மனியர்கள் முக்கியமான சாட்சிகளாக இருந்தனர். அவர்கள் ஜெர்மனியில் வசித்துவந்தனர். அவர்களுக்கு கட்டளை அனுப்பப்பட்டபோது 'அவர்கள் கோட்டில் சமுகமாக அஞ்சுவதாகவும் ஏனெனில் தாங்கள் கொடுக்கும் சாட்சியத்தால் தங்களை எதிரிடம் அனுதாபங் கொண்டவர்கள் கொன்று பழிவாங்கக் கூடுமென்றும் பதில் அனுப்பினர். கோட்டார் அவர்களது கஷ்டத்தை ஒப்புக்கொண்டபோதிலும சட்டப்படி அவர்களது சாட்சியம் வாய்மொழியாகப் பதிவு செய்யப்படவேண்டியது அவசியமென்று அறிவித்தனர். இதனுல் அவர்கள் கோட்டில சமுகமாகவேண்டி வரும் போலிருந்தது ஆனல் அவ்விருவரும் தங்களது வாக்குமூலத்தைக் கிராமபோன் ரெக்காட்டில் எடுக்கும்படி செய்து அந்த ரெக்கார்டுகளைக் கோட்டுக்கு அனுப்பினர். கோர்ட்டார் ரெக்கார்டைக் கிராமபோனில் வைத்து அவர்களது சாட்சியத்தைப் பதிவுசெய்துகொண்டதும் ரெக்கார்டுமூலம் கொடுத்த சாட்சியத்தை வாய்மொழியாகக் கொடுத்த சாட்சியமாகக் கோர்ட் ஒப்புக்கொண்டது.

### பாயிரமா.

டோக்கியோவில் நடந்த கொலைகள் ருஷ்யாவில் ஜப்பான் யுத்தம் செய்யப்போவதற்கு பூர்வாங்கமான ஒரு முகவுரையென்று மாஸ்கோ எண்ணுவதாகத் தெரிகிறது. முகவுரையா பாயிரமா?

# ஜெர்மனி இற்றலிக்கு உதவி

## அபிசீனியாவுக்கு இரகசியச் செய்தி.

### ஜெர்மன் சாமான்களில் லிகிதம்

### நாங்கள் உங்கட்கு உதவியே!

### ஹிட்லரின் 7 நிபந்தனைகள்

#### ஏழு நிபந்தனைகள்.

ஜெர்மனி ஹைன்லாந்துப் பிரதேசத்தில் படையெடுத்தமை சம்பந்தமாக, ஜெர்மனியச் சர்வாதிகாரியான ஹெர் ஹிட்லர் பத்திரிகை நிருபர்களிடம் தமது நிலைமை சம்பந்தமாகப் பின்வருமாறு விளக்கினார்:—

(1) சமீபத்தில் ருஷியாவுக்கும் பிரான்சிற்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. இவ் வுடன்படிக்கை எமக்கு விரோதமாகவே செய்யப்பட்டிருக்கிறது. எனவே நாம் லோக்கார்னோ உடன்படிக்கையை நிராகரிக்கிறோம்.

(2) ரைன் பிரதேசத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பாகங்கள் விஷயத்தில் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளுக்கு இனிக் கட்டுப்பட்டிருக்கவேண்டியதில்லை என்று நாம் கருதுகின்றோம்.

(3) பெல்ஜியமும் பிரான்சும் தங்களுடைய எல்லைப்புறத்தில் சில இடங்களிற் படைகளை வைத்துக்கொள்ளாமல் இருந்தால், எம்முடைய படைகளை எந்தப் பிரதேசத்திற்குள் அனுப்பக்கூடாது என்பதை நிர்ணயம் செய்வதற்கு நாம் இணங்குகின்றோம்.

(4) இத்தாலியும், பிரிட்டனும் பொறுப்பேற்றுக் கொள்ளுவதாக இருந்தால் மேல்பாகத்திலுள்ள பிரதேசங்களில் 25 வருஷ காலம் வரை ஆக்கிரமிப்பதில்லை யென்று ஒரு உடன்படிக்கையைச் செய்துகொள்ள ஜெர்மனி தயாராக இருக்கிறது.

(5) அந்த உடன்படிக்கையில் ஹாலந்தும் சேர்ந்து கொள்வதற்கு அனுமதிக்க ஜெர்மனி தயாராக இருக்கிறது.

(6) மேல் நாடுகள் விஷயத்தில் ஆகாயப்படை சம்பந்தமாக உடன்படிக்கை செய்துகொள்ளவும், லிதுவேனியா உள்பட கீழ்த்தேசங்களுடன் வலுவில் தாக்குவதில்லை யென்று உடன்படிக்கை செய்துகொள்ளவும் ஜெர்மனி தயாராக இருக்கிறது.

(7) சமாஸமான பேச்சுவார்த்தைகள் மூலமாகக் கிரமமான காலத்திற்குள் குடியேற்ற நாடுகள் பிரச்சினை சவுஜன்யமாகத் தீர்த்து வைக்கப்பட்டுவிடுமென்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது.

இந்த நிபந்தனைகளுக்கு இணங்குவதாக இருந்தால், சர்வதேச சங்கத்தில் திரும்பவும் சேர்ந்துகொள்ள ஜெர்மனி தயாராக இருக்கிறது. ஆனால், சர்வதேச சங்க உடன்படிக்கையிலிருந்து வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையைத் தனியாகப் பிரித்துவிடவேண்டும்.

#### இற்றலிக்கு உதவி

"சற்றுப் பொறுமையுடன் இருங்கள்! கடைசிவரை ஊன்றி நில்லுங்கள்; நாங்கள் ஏப்ரல் மாதத்தில் தயாராய்விடுவோம். பின் நாங்களும் உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறோம்" என்று ஓர் செய்தி சீட்டில் எழுதப்பட்டு அபிசீனியாவில் இற்றலிய சேனைக்காக ஜெர்மனி அனுப்பும் சாமான்களின் பெட்டிகளில் ஒட்டப்பட்டிருக்கிறது.

பிரேன்னர்க் கணவாய் வழியாக ஜெர்மனியில் இருந்து இற்றலிக்குப் போகும் புகைரதச் சாமான் வண்டிகளிலும் இதே மாதிரியான செய்தி எழுதி ஒட்டப்பட்டிருக்கின்றதெனச் சொல்லப்படுகின்றது.

## அரசாங்கசபைப் பிரதிநிதித் தேர்தல்

### அபேட்சகர்களும் வெற்றி பெற்றோரும்

#### மன்னார் முல்லைத்தீவு.

திரு R ஸ்ரீ பத்மநாதன் (வெற்றி)
டக்டர். C. சிவசிதம்பரம்

#### நுவரெலியா

மிஸ்டர் E W. அபயகுணசேகரா (வெற்றி)
ஸ்ரீ S இராமையா
ஸ்ரீ J T இரத்தினம்
மிஸ்டர் T. B. இலங்கைத்திலக

#### அம்பாந்தோட்டை

மிஸ்டர் D. M ராஜபக்ஷி (வெற்றி)
மிஸ்டர் L. G. பூலியர்
மிஸ்டர் V. S டீ. S. வி. கிரமநாயக

இவர்களோடு இம்முறைக்குரிய பிரதிநிதித்தேர்தல் நிறைவேறியதாகும்.


# இந்தியன் வங்கி

## லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907]   [வரையறுக்கப்பட்டது.

**தலைமை ஆபீஸ்**
சென்னை (மெட்ராஸ்)

**யாழ்ப்பாணக் கிளை ஆபீஸ்**
(பெரிய கடை)

பொன் நகை, தான்யவகை இவைகளின் சட்டில் சகாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை யாழ்ப்பாணம் மானேஜரிடம் அறிந்து கொள்ளலாம்.

Q 290. 9-3 to 8-6-36   வி


## சந்தியாகுச் சுவாமியின் சாட்சியம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமியாரே, உமது ஆசனக் கோவிலின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் இப்படிப் பெண் கடத்தல் ஓர் ஆடவனுடன் சோரமாக ஓடுதல் என்பனவற்றைச் செய்தால், அது உமக்கு விருப்பமாயிராது?—ஓம்.

தேவாலயத்துவளவுக்குள் இருந்த ஓர் பெண் ஆடவனுடன் களவாகச் சென்றால் விரும்புவீரா?—இல்லை.

16 வயதுள்ள ஓர் மங்கை தான் விரும்பிய ஆடவனுடன் சோரமாகச் சென்றால் அது குற்றமல்ல என்று நினைக்கிறீரா?—சமய விஷயமாகச் சொல்லுமிடத்து அது குற்றந்தான்.

ஒக்டோபர் மாதம் 16-ம் தேதி வரைக்கும் உமக்குக் கேட்ட சத்தத்தைப்பற்றி நீர் ஒருவரிடமும் கூறவில்லையா? — இது சம்பவம் நடந்த அடுத்தநாட்காலையே அதைப்பற்றி மணியகாரனுக்குச் சொன்னேன்.

"ஓ அப்பு, ஓ அப்பு என்ற சத்தம் உமக்குக் கேட்கவில்லை? — ஓர் சத்தம் கேட்டது; ஆனால் எப்படியான சத்தம் என்பதைச் சொல்ல முடியாது.

இதன்பின் அச்சுவேலி உபதேசியாரான பஸதியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை பின்வருமாறு சாட்சியங் கொடுத்தார்:

"குறித்த சம்பவம் நடந்த தினத்தன்று பின்னேரம் 3½ மணி வரையில் நான் அச்சுவேலித் தேவாலய வளவுக்குள்ளாக, எமது பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன், அப்போது திருச் செல்வத்தின் படலைக்குச் சமீபமாக ஓர் கார் நின்றது. அந்தக் காரில் இருந்தவர்கள் யார் யார் என்று என்னால் சொல்ல முடியாது. பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது 'ஓ அப்பு ஓ அப்பு" என்றோர் சத்தங் கேட்டது. அது ஓர் பெண்ணின் சத்தம். நான் இது என்ன சத்தம் என்பதை அறிவதற்காக வெளியே வந்து பார்த்தபோது, ஓர் கார் மிகவும் வேகமாகச் செல்வதைக் கண்டேன். மேரிப்பிள்ளையைப் பலவந்தமாகத் தூக்கிச் செல்கின்றனர் என்று ஆட்கள் கூறினர்.

### குறுக்கு விசாரணை

நீதிபதி: உமது சாட்சியம் மிகவும் முக்கியமானது: நீர் ஓர் உபதேசியார்: அத்துடன் முதியவர்: நீர் இது சம்பவத்தை அறிந்ததும் என்ன செய்தீர்?—பொலிஸ் விதானை வந்து என்னையும் சுவாமியாரையும் விசாரித்தவர் நான் எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

நியாயவாதி: உடையார் உமது சகோதரன்; அவரிடம் சென்று என கூறவில்லை? — நான் அவரிடம் செல்லவில்லை.

முதுகு கூனல் உள்ள இன்னாசி என்னும் வேலைக்காரப் பெண் உம்மிடம் இருக்கிறாள்?—இல்லை.

அவளைத்தான் 1ம் எதிரி விவாகம் செய்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது?—ஓம்

அதன்பொருட்டு நீர் விருந்தும் செய்தீர்?—ஓம்

அதன்பின் இன்னாசி மறுத்துவிட்டாள்?—ஓம்.

இதன்பின் அந்தோனிபெண் அன்னம்மா சாட்சியம் பகர்ந்தாள். விசாரணை இன்றைக்கெனத் தவணையிடப்பட்டது.

## மயிலிட்டியில் கோரக் கொலை.

முருகர் சின்னையா என்னும் மயிலிட்டிவாசி யொருவர் தனது கட்டுமரத்தை அவிழ்ப்பதற்காக கடற்கரைக்குச் சென்றபோது அங்கு நின்ற அருணாசலம் என்னும் அவர் சகோதர முறை பூண்ட ஒருவருடன் வாக்கு வாதம் நேரிட்டு அதன் பலனாய் மேற்படி அருணாசலமென்பவர் சின்னையாவுக்கு அடித்தபோது, அவர் விழுந்து உடனே மரணமானரென ஓர் செய்தி எட்டுகிறது. பொலிசார் நடவடிக்கை எடுக்கின்றனர்.

## அபிசீனிய மந்திரி மரணம்.

### இற்றலியரின் மனமாற்றம் தலைநகர்மீது விமானப் பதவி.

### மீண்டும் வெடிகுண்டு வீச்சு

## இந்திய அரசியற் குறிப்புக்கள்.

### பெண் கல்விக்காக 3 லட்சம்.

போர்பந்தரில் ஒருகன்னியாகுருகுலம் ஸ்தாபிக்கப்பட்டு பெண்களுக்கு நல்ல கல்வி அளிக்கப்படுவதற்காக சேத் நாஞ்சி காளிதாஸ் 300,000 ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார். புதிய கல்விச் சாலைக்காக போர்பந்தார் மகாராஜா ஸாஹிப்பின அரசாங்கம் குறைந்த விலைக்கு ஒரு தகுதியுள்ள மனையை அளித்திருக்கிறது.

### லக்ஷ்மணபுரி காங்கிரஸ்

லக்ஷ்மணபுரி காங்கிரஸுக்கு வரும் உத்கால் பிரதிநிதிகள் காங்கிரஸ் மகாசபையின் அடுத்த கூட்டத்தை ஒரிஸாவில் நடத்தும்படி அழைப்பார்கள். 48 வது காங்கிரஸ் பூரியில் நடக்க விருந்தது. ஆனால் 1932-ம் வருஷத்தில் சட்டமறுப்பு இயக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதால் அக் காங்கிரஸ் உபசரணைக் கமிட்டி சட்ட விரோதமானதெனப் பஹிஷ்கரிக்கப்படுத்தப் பட்டது அதன் பிறகு காங்கிரஸ் பம்பாயில் நடந்தது. பூரியில் ஏற்பட்ட உபசரணைக் கமிட்டியிடம் இன்னமும் 10 ஆயிரம் ரூபாய் இருக்கிறது. இதைக் கொண்டு அவர்கள் காங்கிரஸைத் தங்கள் மாகாணத்துக்கு அழைத்திருக்கிறார்கள்.

### காங்கிரஸ்காரர்கள் துரோகிகளாம்.

பஞ்சாப் பொதுவுடமைக்காரர்களென்று சொல்லப்படும் இக்பால் சிங், சோமநாதலாஹிரி, சிந்தாசிங் முதலான மூன்று பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. வழக்காளி தரப்பு வக்கீல் ஸ்ரீமான் வெலிங்கர் தமது வழக்கைத் தொடர்ந்து, எதிரிகளின் அறையில் கைப்பற்றப்பட்ட பிரசுரங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் அவர்களது கட்சியின் புரட்சி சம்பந்தமான நடவடிக்கைகளையும் சாமர்த்தியத்தையும் தந்திரத்தையும் குறிப்பிட்டுச் சொன்னார். ஒரு பத்திரத்தை வக்கீல் வாசித்துக் காண்பித்து, இந்திய தேசிய காங்கிரஸ் 'துரோகிகள்' அடங்கிய ஒரு சபையென்றும், காந்திஜி போன்ற சில தலைவர்கள் வகுப்புவாதப் பற்றுள்ள பிற்போக்கான நடுத்தர சமூகத்தைச் சேர்ந்தவர்களென்றும் அதில் அக்கட்சியினர் குறிப்பிட்டிருப்பதை அவர் விளக்கிக் கூறினார்.

### காந்திஜி மீது பழி

இந்தியா சட்டசபையில் ஸ்ரீமான் எஸ். கே. ஸோம் "1933-4-ல் இந்தியா" என்ற புத்தகத்தில் காந்திஜி ஹரிஜன இயக்கத்தை ஆரம்பித்ததற்கு வேறு காரணங்களிருப்பதாக எழுதப்பட்டிருப்பதைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார். அதற்குக் கனம் ஸிரெய்க் அளித்த பதிலாவது:—

"1933-34-ம் வருஷத்தில் இந்தியா" என்ற புத்தகத்தில் 4-வது பக்கத்தில் உள்ள ஒரு வாக்கியத்தைப் பற்றி இக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன இயக்கத்தில் சமூகக் குறைகளை நீக்குவது தவிர வேறு நோக்கமும் கலந்திருந்ததாக நினைக்கவேண்டியிருக்கிறது. எனச் சொல்லப்பட்டிருந்தது. ஹரிஜன இயக்க சம்பந்தமாகச்சிலர் கொண்ட அபிப்பிராயத்தையே அந்த அறிக்கை வெளியிட்டது பத்திரிகைகளில் வெளியான செய்திகளை ஆதாரமாகக் கொண்டும் இவ்விதம் சொல்லப்பட்டது இந்தியாவில் சில சங்கங்களும் பொதுஜனங்களும் இவ்விதம் இந்த இயக்கத்தைப் பற்றித் தவறாக கூறினார்கள். பத்திரிகைகளில் இது சம்பந்தமாக வெளிவந்த செய்திகளைச் சபையில் ஆஜர்படுத்தவும் சித்தமாகவிருக்கிறேன். இதிலிருந்து தக்க ஆதாரத்தைக்கொண்டே அந்த வாக்கியம் வெளியிடப்பட்டதாக அறியவேண்டும். ஆகையால் அதை எடுத்து விடவோ அன்றி அப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவோ உத்தேசிக்கவில்லை.

### வந்து விட்டார்

பண்டிதர் ஜவஹர்லால்நேரு அவர்கள் நேற்றுத்தினம் அலஹாபாத்திற்கு வந்து விட்டார், அவரது மனைவியாரது சாம்பர் கங்கைநதியில் இடப்பட்டது.

### அடிக்கடி மனமாற்றம்

சர்வதேச சங்கத்தின் வேண்டுகோட்கிணங்கி, தான் சமாதானத்திற்காயத்தம் என்பதை அறிவித்து யுத்தத்தை நிறுத்துமாறு இற்றலி தனது படைவீரர்க்குக் கட்டளையிட்டுவிட்டது என ஓர் செய்தி முன்னர் வந்தது. ஆனால், "நாம் அபிசீனியாவில் எதனை லட்சியமாகக் கொண்டிருக்கிறோமோ அதனை அடையும் வரைக்கும் யுத்தத்தை நிறுத்த மாட்டோம் என்று கடற்படைத் தளகர்த்தரான கியாஜேப்பிபு இற்றலியப் பாராளுமன்றத்தைத் திறந்து வைக்கையிற் கூறினர்.

இப்படி இற்றலி திடீரென மனமாற்றம் கொண்டமைக்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை.

### குண்டுமாரி.

டெஸி நகரின்மீது சென்ற 9-ம் தேதி மீண்டும் இற்றலிய விமானங்கள் குண்டுமாரிபொழிந்தன. பிரிட்டிஷ் செஞ்சிலுவை நிலையமும் தகர்க்கப்பட்டது.

### தலைநகர்மீதும் வெடிகுண்டு.

அபிசீனியத் தலைநகரான அடிஸ் அபாபாவின்மீது சென்றவாரம் சில இற்றலிய விமானங்கள் பறந்து சென்றன. எனவே நகரத்தின்மீது எந்நேரமும் வெடிகுண்டு வீசப்படும் என்றபயத்தினால் ஜனங்கள் ஓடிப்போகின்றார்கள்.

### இற்றலி முன்னேற்றம்.

இற்றலியப்படைகள் இப்போது தீவிரமாக முன்னேறி வருகின்றன. சோமாலிலாந்தில் தெருத் திறக்கும் வேலையில் 27000 தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கின்றனர்.

### சர்வதேசசங்கக் கூட்டம்

சர்வதேச சங்கத்துக் கூட்டம் ஒன்று வருகிற சனிக்கிழமை லண்டனிற் கூடுமென்று தெரிகிறது.

### அபிசீனியரின் ஆயத்தம்.

இற்றலியப்படைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக ரூஸ்கஸா என்னும் அபிசீனியச் சேனாதிபதி மிகவும் திறமைவாய்ந்த படைகளுடன் ஆயத்தமாய் நிற்கிறார்.

### யுத்தமந்திரி மரணம்.

அபிசீனிய யுத்தமந்திரியான ரூஸ் மூலகேதா சுவாதநோய்காரணமாக மரணமடைந்துவிட்டார் என ஓர் தந்திச்செய்தி கூறுகிறது.

# சந்தியாகுச் சுவாமியின் சாட்சியம்

2ம் பக்கத் தொடர்ச்சு.

ஓர் சத்தங்கேட்டது; அந்த நேரத்தில் நீர் பாவ மன்னிப்புக் கொடுத்துக் கொண்டிருந்தீர்! ஓர் இளம் பெண்ணுக்கா முதியவளுக்கா பாவ மன்னிப்புக் கொடுத்தீர்? — அதனைச் சொல்ல முடியாது.

அப்போது உமக்கு ஒருவிதமான சத்தம் கேட்டது? — ஓம்.

அந்தச் சத்தம் ஓர் மனுஷனுடையது அல்லது ஓர் சாயுடையது என்று உம்மாற் சொல்லமுடியாது? —(மவுனம்)

நீர் அந்தச் சத்தத்தை மீண்டும் கேட்டீர்? —ஓம்.

எப்படியான சத்தம்? —ஓர் இரக்கமான ஓலம்.

கதவுக்குவெளியே வந்தபோதுதான் ஓம் சத்தம் கேட்டது என நீர் பொலிஸ்கோட்டிற் சாட்சியம் கொடுத்திருக்கிறீர்? —நான் அப்படிச் சொல்லவில்லை.

மேரிப்பிள்ளையைக் குருசுமுத்து முதலியவர்கள் களவாடிச் சென்றார்கள் என்று உமக்கு அன்னம்மா சொன்னபோது, அச்சமயவர்களைக் கண்ணாற் கண்டாயோ என்று அன்னம்மாவைக் கேட்டீரோ? —நான் கேட்கவில்லை.

மேரியம்மா (மேரிப்பிள்ளையின் தங்கச்சி) அங்கே இருந்திருப்பாளானால், கட்டாயம் உம்மிடம் வந்து இச் சங்கதியைச் சொல்லியிருப்பாள்? —(மவுனம்)

சுவாமியாரே, இங்கே பாரும், நீர் இந்த வழக்கில் எக்காரணம் கொண்டோ அறியேன், ஆரம்பம் தொட்டுக் கடைசிவரை மிகுந்த கரிசனை எடுத்து வந்திருக்கிறீர்? —நான் ஏன் கரிசனை எடுக்கவேண்டும்?

சுவாமியாரே என்னைக் கேள்விகள் கேட்கவேண்டாம் நீர் கேள்விகள் கேட்க, நான் மறுமொழி கூறுவதாயின் நாங்கள் இடம் மாறவேண்டியது தான்; நான் சாட்சிக் கூண்டிலும், நீர் நியாயவாதி ஆசனத்திலும் நிற்க வேண்டியது; விளங்குகிறதா?

—சரி, நான் இந்த வழக்கிற் கரிசனை எடுக்கவில்லை.

மேரிப்பிள்ளை நல்லவள் என்று "சேட்டிப் பிக்கற்" கொடுக்கிறீர்? —ஓம்.

ஜோசப்பும் நல்லவன்தான்? —ஓம்.

மேரியம்மா உமக்குப் பயப்படுபவளா? —இல்லை.

அப்படியானால் உம்முடன் அவள் தட்டுத்தடையின்றி ஊடாடுபவள்? —ஓம்.

இச்சம்பவம் நடந்த தினத்தன்று பின்னேரம் நீர் பாவமன்னிப்புக் கொடுக்கும் வேலையில் இருந்தீர் —ஓம்.

அன்னம்மாவும் உமது மந்தையிற் சேர்ந்த ஆடுதான் —ஓம்

அம்மந்தையிற் கறுத்தஆடு மேரிப்பிள்ளை? —(மவுனம்)

அன்னம்மா, மேரியம்மா, குருசுமுத்துவுடன் ஓடிய மேரிப்பிள்ளை என்பவர்கள் உம்மிடம் தாம் ஏது சொல்லவில்லை என்கிறார்களே, அதன் காரணம் என்ன?

—சாட்சிகளைப் பின்பு அவர்க்குப்படி செய்துவிட்டார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

சுவாமியாரே, இங்கே பிரசங்கம் புரியவேண்டாம். என்னுடைய கேள்விகளுக்கு மறுமொழி சொல்லும். அடுத்த நாட்காலை ஜோசப்பும் மரியம்மாவும் உமக்கு வாக்கு மூலம் தந்தனர் என்று நீர் கூறுகின்றீர்?

—ஓம்,

ஆனால் அவர்கள் தாம் ஒன்றும் உமக்குக் கூறவில்லையென்று பகிரங்கமாகக் கூறுகின்றார்களே?

—(இந்தச் சந்தர்ப்பத்தில். சாட்சி மறுமொழி கூறாது நியாயவாதியை விழித்துப் பார்க்க)

நீதியரசர்: சுவாமியார் அவர்களே, மிஸ்டர் துரைசுவாமி உம்மைப் பொறிவைத்து அகப்படுத்த முயறுகின்றார் என்று நினைக்கவேண்டாம். சாட்சிகளை அப்படி அவர் செய்வாரானால், அதனைத் தடுப்பதற்கு நான் இருக்கிறேன. மிஸ்டர் துரைசுவாமி அப்படி மாட்டுதற்கான கேள்விகள் கேட்டவர் அல்ல. எனவே அவர் கேட்கும் கேள்விகளுக்குத் தயைபுரிந்து மறுமொழி சொல்லவும்.

சாட்சி:— அடுத்த நாட் காலை உபதேசியார் என்னிடம் வந்து தெருவில் தான் நிக்கோலாசைச் சந்தித்ததாகவும், மேரிப் பிள்ளை கோட்டில் பொய்ச் சாட்சியம் கொடுத்து விட்டாள் என அவர் சொன்னதாகவும் சொன்னார்.

மிஸ்டர் துரைசுவாமி எனவே அன்றிரவு முழுவதும், இந்த உபதேசியார் ஆந்தை போல அலுவல் பார்த்திருக்கிறார்?

தெரியாது

மரியம்மாவும் ஜோசப்புவும் இப்போது ஒருவர் ஒருவராக உம்மைக் கைவிட்டு விட்டனர். (சாட்சியின் கைகள் நடுங்க) சுவாமியாரே, உம்முடைய விரல்கள் மூலமாக ஆவி போகின்றதே!

நீதியரசர்: நீர் உமது காதால் ஓர் சத்தம் கேட்டேன் என்றீரே? அதன் முடிவு என்ன?

சாட்சி: ஆண்டவனே, எனக்கு இங்கே வந்து சாட்சியம் அளிக்க விருப்பமில்லை: விளுப்க்கோட்டிற்கு இழுபடவும் நான் விரும்பவில்லை.

நியாயவாதி: நீதிஸ்தலத்திற் சாட்சியம் கூற நீரே வலிந்து முன் வந்தீரமே? — அது சுத்தப் பொய் (Non sense)

இப்படியான வார்த்தை மீண்டும் இங்கே உபயோகிக்க வேண்டாம்.

நீதியரசர்:—நீர் குருவானவர் என்ற நியதியில் நீதிஸ்தலங்களிற் சாட்சியம் கூறத் தடுக்கப்பட்டிருக்கிறீரா?

சாட்சி:—எனது சாட்சியம் மிகவும் ஆவசியகம் என்றால் தான் அப்படி அதனை அளிக்க அனுமதிக்கப்படுகின்றேன்.

நியாயவாதி.— ஆனால் நீர் ஓர் பிரிட்டிஷ் பிரஜை? —ஓம்

எனவே நீர் எமது இராசாவுக்குச் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு —ஓம்.

தொடர்ச்சி 5ம் பக்கம்.

## சோனகதெரு அடிபிடி.

யாழ்ப்பாணம் சோனகதெருவில் வசிக்கும் ஆசனுலெப்பை முகைதீன் சாய்பு சென்ற 8ம் தேதி 4 மணியளவில் தான் ஐந்து சந்திக்குக் கிட்ட நிற்கும்போது தன்னை நூறுமுகம்மது கட்டிப்பிடிக்க முகமது உசனார் ஓர் கத்தியின் பிடக்கால் அடித்தார் எனக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடர்ந்தார். வழக்கு 24ம் திகதிக்குத் தவணையிடப் பட்டது.

## பெரியகடையில் தேயிலைக் களவு.

சென்ற 10-3-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பெரியகடையில் கடை வைத்திருக்கும் K. மீராசாய்பு சென்ற 5-3-36ல் தான் கடையை மூடிவிட்டு (இரவு) வீட்டுக்குப் போனதாகவும் மறுநாள் காலை வந்து கடையைத் திறந்தபோது பிற்பக்கத்துக் கதவு பலவந்தமாகத் திறக்கப்பட்டிருந்ததாகவும் கடைக்குள் இருந்த 100 இறுத்தல் நிறையுள்ள ஓர் தேயிலைப்பெட்டியைக் காணப்படாமையாலும் சம்பவத்தைப் பொலிசாருக்கு அறிவித்திருந்தார் பொலிசார் இதை விசாரித்து ஓர் பெட்டியுடன் ஜீனதாஸ் என்பவனைப் பிடித்தனர். அப்பெட்டி தனதென மீராசாய்பு ஒப்புக்கொண்டு எதிரியைக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார்; வழக்குத்தவணையிடப்பட்டது

## ஜூனியர்ப் பரீட்சை கேம்பிரிட் பரீட்சை முற்று.

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

சென்ற 1935ம் ஆண்டு டிசெம்பர் மீ நிகழ்ந்த கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்தாரின் ஜூனியர்ப் பரீட்சையில் இக் கல்லூரியிலிருந்து பிரவேசித்த 39 மாணவருள் பின் வருவோர் சித்தியடைந்தனர்.

1. அபயானந்தன்
2. ஆனந்தகுமாரசாமி
3. ஆனந்தம் P
4. அருளம்பலம் K
5. ஆறுமுகசாமி D
6. கணேஸப்பிரபு K
7. சுப்பிரமணியம் K
8. கனகசபாபதி C
9. கார்த்திகேசு S
10. கோணேசன் A
11. குககாகதாஸ் K
12. மாணிக்கவாசகர்
13. முருகேசு S
14. குமாரசூரியர் M
15. நடராசா T
16. நாகரத்தினம் M
17. நகுலேஸ்வரர் M
18. நமசிவாயம் S
19. பாலசுப்பிரமணியம்
20. சங்கரப்பிள்ளை M
21. சரவணபவன் S
22. சிவநாதன்
23. சிவசிதம்பரப்பிள்ளை
24. சொக்கலிங்கம் V
25. வைகுந்தநாதன் S
26. வீரசிங்கம்
27. விசுவநாதன்

## காலியில்சோரக்கள் வியாபாரம்

காலிப்பகுதியில் சோரக்கள் வியாபாரம் சென்ற ஆண்டில் அதிகரித்திருக்கிறதென தென்மாகாணத் தலைவர் தமது 1935ம் ஆண்டுப் பரிபாலன அறிக்கையிற் குறிப்பிடுகிறார்.

## சுருட்டுத்தொழிலாளர் மகாநாடு.

யாழ்ப்பாணம் சுருட்டுத்தொழிலின் கேவல நிலையைப்போக்குதற்கு என்ன என்ன நடைவடிக்கைகளைக் கையாளலாம் என்பதைபற்றி ஆலோசிப்பதற்காக வருகிற சனிக்கிழமை (14-3-36)மாலை6மணிக்கு வண்ணை வங்கடேஸ்வரப் பெருமாள் கோயில் முன்றிலில் ஓர் மகாநாடு கூடுமெனவும் அதற்கு ஸ்ரீமான் வை. சி, சிகுமாரசுவாமி B. A. தலைமை வகிப்பார் என்றும் அறிகிறோம்.

## 16,758,512 இருத்தல்தேயிலை.

சென்ற பிப்ரவரி மாதம் இலங்கையிலிருந்து எல்லாமாக 16758512 இறுத்தல் தேயிலை ஏற்றுமதியாக்கப்பட்டிருக்கிறது.

## வேலையின்மை குறைகின்றதாம்.

சென்ற பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்தில், முந்திய மாதத்திலும் பார்க்க வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் குறைந்திருக்கிறதென பிரிட்டிஷ் அரசினரின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## தங்கப் பவுண் விலை.

தங்கப்பவுண் ஒன்று இப்போது 22 ரூபா 60 சதமாக விற்கப்படுகின்றது.

## லண்டனில் இந்திய ஐரிஷ் சங்கம்.

இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் ஐயர்லாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய-ஐரிஷ் சங்கத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று இன்னும் சில தினங்களில் லண்டனில் ஸ்தாபிக்கப்படும் என அறிகிறோம்.

# சர்வம் சிங்களமயம்.

## பதவிகளைப் பிரிக்கச் சூழ்ச்சியா? சிங்களக் காங்கிரசின் கெட்டித்தனம்.

## தம்பிமுத்துவுக்கும் ஓர் அற்பபதவி?

[நமது அரசியல் நிருபர்]

கொழும்பு 11-3-36

கொழும்பில் இருந்து சென்ற வாரம் யான் ஓர் கடிதம் எழுதியனுப்பினேன்; மந்திரிப் பதவிகள் விஷயமாகச் சொல்லுமிடத்து இரு பதவிகள் ஸ்ரீமான் துரைசுவாமிக்கும் ஸ்ரீமான் மகாதேவாவுக்கும் கிடைக்கலாமென்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் தமிழ் மக்களுக்கு பொறுப்பு வாய்ந்த பதவிகளைக் கொடுப்பது சிங்களத் தலைவர்களின் நோக்கம் இல்லைப்போல, அவர்கள் இப்போது சிலதினங்களாக நடாத்தி வரும் குசுகுசு கூட்டங்களிலிருந்து தெரிய வருகிறது.

அகில — இலங்கைக் காங்கிரஸ் என்று பெருமிதமாகத் தன்னைச் சொல்லிக் கொள்ளும் கிழ்நாட்டுச் சிங்களக் காங்கிரசைச் சேர்ந்துள்ள தலைவர்கள் மந்திரிப் பதவிகள் முழுவதையும் தமக்குள்ளே பிரிக்கச் சூழ்ச்சிசெய்து வருகின்றனர் என்று நான் அறிகின்றேன:— அவர்கள் மந்திரிப் பதவிகளைப் பின்வருமாறு தமக்குள்ளே பிரிக்க மனப்பால் குடிக்கின்றனர்.

1. உள்நாட்டுமந்திரி: சேர் D B ஜெயத்திலகா (களனி)
2. விவசாயமந்திரி: மிஸ்டர் D. S. செனநாயக்கா (மினுவாங் கொடை)
3. கைத்தொழில் மந்திரி: மிஸ்டர் G C. S. கொறியா (சிலாபம்)
4. போக்குவரத்துப்பகுதி மந்திரி: மிஸ்டர் J. L. கொத்தலாவலை (குருநாகல்)
5. கல்வி மந்திரி: மிஸ்டர் C. W. W கன்னங்கரா. (மத்துகமா)
6. சுகாதாரமந்திரி: மிஸ்டர் W. A. டீ. சில்வா (மொறட்டுவா)
7. ஸ்தலசுபாட்சி மந்திரி: மிஸ்டர் S. W. R. D பண்டாரநாயக்கா (வியாங்கொடை)

அரசாங்கசபைத் தலைவர்ப் பதவியை மிஸ்டர் பிரான்சிஸ் டீ சொய்சா (பலப்பிற்றியா) வுக்குக் கொடுக்க ஆலோசனை நடந்து வருகின்றது: சிங்களருடன் சேர்ந்து இந்த டொனமூர் அரசியலை அங்கீகரித்த மிஸ்டர் E R தம்பிமுத்து (திருக்கோணமலை) வுக்கு அரசாங்கசபை உப தலைவர்ப் பதவியைக் கொடுப்பார்கள் போலத் தெரிகிறது.

இப்படி மந்திரிப் பதவிகளைப் பிரிக்க வேண்டும் என்பது காங்கிரஸ் வாதிகளாம் சில சிங்களத் தலைவர்களின் விருப்பம்: ஆனால், இவர்களின் விருப்பப்படி எல்லாம் நடந்து விடுமா? நான் முன்னர்க் கூறியபடி ஜெயத்திலகா செனநாயக்காக் கோஷ்டியுடன் பலதர அபிப்பிராய பேதம் கொண்டுள்ள சிலர் இந்த அரசாங்கசபையில் அங்கத்தவம் பெற்றிருக்கின்றனர் என்பதை மறந்துவிடக் கொண்ணாது.

## ஓட்டுமடம் கத்திவெட்டு

ஓட்டுமடத்திலே நாகன், ஆறுமுகத்தான், பொன்னன் என்பவர்கள், கதிரேசு, செல்லத்தம்பி என்பவர்களைக் கத்தியால் வெட்டிக்காயப்படுத்தினர் என்ற வழக்கு விசாரணை வருகிற 2-4-36 இற்குத் தவணையிடப்பட்டது.

## இலங்கை வைத்தியப்பகுதித் தலைவர்.

இலங்கை வைத்தியப்பகுதித் தலைவரான டாக்டர் R. பிரயர்லிப் என்பவர், ஈராக் தேசத்து வைத்திய இலாக்காவை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை ஆராய்ந்து ஓர் அறிக்கை வெளியிடுமாறு அத்தேசத்து அரசினரால் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

## கணவன் — மனைவி பிணக்கு.

சென்ற 10-3-36 செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டையில் வசிக்கும் இளையதம்பி பொன்னம்பலம் அவ்வூரில் வசிக்கும் அவருடைய மனைவி யோகம்மாவின் வீட்டுக்குச் சென்று (சென்ற 3-3-36 இரவு 9 மணியளவில்) அவளை (யோகம்மாவை)த் தள்ளிவிழுத்தி கையில் இருந்த காப்பையும் இழுத்துப்பறித்துக்கொண்டு திண்ணையில் இருந்த கொடுவாட்கத்தி ஒன்றையும் எடுத்துச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி யோகம்மா ஓர் வழக்குத் தொடர்ந்தாள். சென்ற 6 மாதக் காலமாகத் தானும் புருஷனும் பிரிந்திருக்கிறதாகவும் சொன்னாள். வழக்கு வருகிற 18-ம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

## 500ரூபா அல்லது 1 வருஷம்

உரும்பராயில் வசிக்கும் நாகமுத்தன் சிதம்பரி என்பவனுடைய வீட்டுக்குள் சென்ற ஐப்பசி மாசம் 26உ உட்சென்று களவாடியதாக அவ்வூர் வைரவன் அப்புக்குட்டி யென்பவனை குற்றஞ்சாட்டியவழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டு எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு எதிரி 500 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றான். பணம் கட்டத்தவறினால் 1 வருஷச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## கடைசிக் கூட்டம்.

பழைய அரசாங்கசபையால் நேரிவு செய்யப்பட்ட மந்திரசபையின் கடைசிக் கூட்டம் நேற்று நிகழ்ந்தது.

## சங்கீதத்தின் மாட்சி

சங்கீதமானது மனிதரின் துர்க்குணங்களை அடக்க வல்லதாகும்; எனவே இந்த நாட்டுக்குச் சங்கீத அபிவிருத்தி ஏற்படுமானால், குற்றங்களும் அருகிவிடும் என்று வெலிகமப் பகுதி வித்தியாதரிசியான மிஸ்டர் ஈ. மோறத்தி என்பவர் சென்ற திங்கட்கிழமை வெலிகமவில்நிகழ்ந்த சங்கீதப் போட்டி விழா ஒன்றிற் புகன்றார்.

## இலங்கை சம்பத்தமான பயஸ்கோப்படம்.

இலங்கையில் உள்ள பல இடங்களை மேனாட்டுக்கம்பனியார் பயஸ்கோப்படம் பிடித்து வருகின்றனர். இப்படக்காட்சி 15000 மண்டபங்களில் 4 பாஷைகளிற் காட்டப்படும் என்று தெரிகிறது.

## வீட்டுக்கு நெருப்பு.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் தெல்லிப்பளையில் வசிக்கும் (1) V. இளையவன், (2) E. கந்தன், (3( E விருசி, (4) K. சின்னட்டியன், என்பவர்கள் அவ்வூர் விருசியர் சின்னத்தம்பியின் வீட்டுக்கு நெருப்பு வைத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளைக் குற்றவாளிகளெனக்கண்டு 1ம். 2ம். எதிரிகட்கு அனுக்கு ஒவ்வொருவருக்கு மறியலும் 8ம். 4ம். எதிரிகளை நல்நடத்தையில் இருக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது.

## பெல்ஜியமந்திரி விஜயம்.

பெல்ஜியம் பிரதமமந்திரியான வான் ஸீலந்து என்பவர் பிரான்சிற்கு விஜயம் செய்திருக்கிறார். இவரது விஜயத்திற்கும், ஜெர்மனியின் யுத்தஆயத்தத்திற்கும் நெருங்கியதொடர்பு இருக்கிறது.

## விற்பனவு விளம்பரம்.

கிளிநொச்சிக் கனிமரத்தோட்டச் சமுதாயம்.

**The Kilinochi Plantations Ltd.**

கிளிநொச்சிக் கனிமரத்தோட்டம் எனப் படும் இரணைமடுப் பாவிப் பஞ்சன காட்டில் கீழே சொல்லப்படும் காணி லிக்குயிடேற்றேஷ் கேள்விப்படி (Liquidators) 1936ம் ஆண்டு பங்குனி மாதம் 21ந் திகதி [இங்கிலிஷ்] சனிக்கிழமை சாயந்தரம் 2½ மணி தொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையிலே மோட்டோர் இயந்திரங்கள் நிற்கும் இடத்திற்குச் சமீபமாய்ப் பிரசித்த ஏலத்திற் கூற் விற்கப்படும். விபரங்களை வெக்தீஸ்மேஸ்தராகிய என்னிடமும் லிக்குயிடேற்றேஸில் (Liquidators) ஒருவராகிய மிஸ்டர் அ. ஆ. கந்தையா அவர்கள் (வட்டுக்கோட்டை வெக்தீஸ் மேஸ்தர்) இடமும் கேட்டுக்கொள்ளலாம்.

விலை வாக்கூடுமானால் பல துண்டுகளையும் முழுவதையும் ஒருவர் வாங்கக்கூடுமானால் அப்படியும் அக்கோர்த்து வசதிக்குத் தக்கபடி திரிக்கூறி விற்கப்படும். வாங்குவோர் அக்கோம விலை பொலையில் காலில் ஒன்றும் வெக்தீசிற் சொல்லப்பட்ட செலவுகளும் என்னிடம் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெறவேண்டியது.

### ஆதன விபரம்.

யாழ்ப்பாணம் டின்திறிக்கில் கிளிநொச்சியில் ஒன்பது (9) துண்டுகளை ஒரேதொடர்பாகவுடைய 58 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச் (58-2-13) இதில் 10 ஏக்கர் திருத்திப் பண்படுத்தப்பட்டு அதில் ஏறக்குறைய 130 ஒட்டுமா, 50 பலா, 50 தோடை, 150 மாதுளை, 150 எலுமிச்சை முதலிய மரங்கள் செளிப்பாக நிற்கின்றன. சில மரங்கள் காய்க்கத் தொடங்கி விட்டன.

மூன்று அறைகளோடு கூடியதாய் செங்கற் கட்டிட வங்களா ஒன்றும் தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் குழாய் தண்ணீர்த்தாங்கி முதலியன 200 ரூபா செலவிட்டு அமைக்கப்பட்டுள்ளன.

வண்ணார்பண்ணை,
21—2—36.
(Mis 292. 12 3-36,)

**N. P. Appar.**
வெக்தீஸ்மேஸ்தர்.

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரைவுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 25ம் ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.

## கொயிலன் வங்கி
## (லிமிற்றெட்)
### (1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)
## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்
( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறோம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விஞவியறிந்துகொள்ளலாம்.

**V. C. ஓமன் B. A.**
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36

## நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரைவுளது ]

மூலதனம் ரூபா 30,000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை சுரைச்சி நீர்ப்பாசனப்பகுதிகளில் நடந்துவருகிறது.

பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம். பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு ஐந்து கழிவு நீர்ப்பாசனப் பகுதி வேளாண்மை நாளேற வருமாய் வருவது தெளிவாயிற்று

அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ சோமசுந்தரம்
" கந்தரோடை வித்தியாசாலை மனேஜர் சி. கந்தையா
" நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்

ஆரம்ப கருத்தாக்கள்:—

Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R. R. நல்லையா J. P. யா. க. ச. தலைவர்,
சி. முத்துவேலு J. P. சொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்,
K. தம்பிப்பிள்ளை வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை,
க. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை.

(B 192. 6-11-35 to 5-5-36 (வி)

## NOTICE OF SALE OF LAND

காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 8871 ம் இலக்கவழக்கில் 1936 ௵ பங்குனி௴ 3ந் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936 ௵ சித்திரை௴ 11 ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4½ மணி தொடக்கம் அந்தந்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிற்ற சொத்தியான் கிடா பரப்பு நிலம். இலா 5 பனைகளும் வான்பயிர்களுங் கொண்டதற்கு எல்லை கிழக்கு இரண்டாம் எதிரி வள்ளிப் பிள்ளையின் ஆதனம் வடக்கு எதிரிகளினுடைய ஆதனங்களும் மறுபேர்களுடையதும் மேற்கு நாலாம் எதிரி பொன்னம்பலத்தினுடைய ஆதனமும் மறுபேருடையதும் தெற்கு ஒழுங்கை இதற்குக் காணியில் உள்ள கிணற்றில் காவிலை ஒரு பங்கும் உட்பட, K 29/85ம் இலக்கத்தில் பதிவு.

2. மேற்படி இறை நாவியடி வயல் பர. நெ. இலா. 27 எல்லை கிழக்கு மூதக்கம்பி புதக்கம்பியின் ஆதனமும் நாலாம் எதிரி வேலாயுதர் பொன்னம்பலத்தின் ஆதனம் வடக்கு ஆறுமுகம் பெண் அம்மாவின் ஆதனம் மேற்கு சம்பிப்பிள்ளை குமாரசாமியின் ஆதனம். தெற்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமிகோவில ஆதனம் மேற்குப்புறத்தே உள்ள சம்பிப்பிள்ளை குமாரசாமியின் ஆதனத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் பதிவு K 29/86.

3. பிரசித்த நொத்தாரிசு எஸ் சுப்பிரமணியம் முன்னிலை 1932ம் ஆண்டு வைகாசி மாசம் 30ந் திகதி 1091 இலக்கத்தில் முடிந்த ஒற்றி உறுதியில் மூன்றாம் எதிரிக்கு உரிய உரிமை உறுதி சேர்ந்தை முழுவதும் இந்த ஒற்றி உறுதியில் சொல்லப்பட்ட காணியாவது.

வலிகாமம் கிழக்கு புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டியிற்ற பிதியாறுவளை தோட்டம் பர. நெ. இலா. 3½யும் பிதியாறுவளை தோட்டம் பர. நெ. இலா. 7¼ ஒருமித்த பர. நெ. இலா 10¾ எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில் ஆதனங்களும் கார்த்திகேசு பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும் வடக்கு வைத்திலிங்கம் வயிரமுத்தின் ஆதனங்களும் மறுபேர்களுடையதும் மேற்கு சகிரித்தம்பி தம்பையாவினதும் தம்பிப்பிள்ளை குமாரசாமியினுடைய ஆதனங்கள். தெற்கு கார்த்திகேசர் வெற்றிவேலுவினதும் மூத்தம்பி விசுவநாதரினதும் சிதம்பர அம்பலவாணசுவாமி கோவில் ஆதனங்களும் வடக்கேகாசிநாதர் தம்பையாவினது ஆதனத்தில் உள்ள கிணற்றில் தண்ணீர் பங்கும் வைத்திலிங்கம் வைரமுத்தினது காணிக்கு ஊடாக வழிவாய்க்கால் உருத்தும்.

வீ. செல்வத்துரை,
கொம்மிஷனர்.
5-3 36.

நீர்வேலி பூதத்தம்பி சின்னத்துரை வழக்காளி

Vs

சிறுப்பிட்டி 1. குழந்தைவேலு கந்தையா 2. பெண் வள்ளிப்பிள்ளை 3. மாதவர் வேலாயுதர் மகள் பொன்னம்மா 4. வேலயுதர் பொன்னம்பலம்.

(Mis 294. 12-3-36)

## Notice of Sale of Land.

காணிவிற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 8869.ம் இலக்க வழக்கில் 1936-ம் ௵ பங்குனி௴ 3-ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப் பட்டிருக்கும் காணி 1936-ம் ௵ சித்திரை௴ 11 ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலியும் நீர்வேலி கோவில் குறிச்சியுமாகிய இறை அச்சுவடையும் கியனயும் பரப்பு நில இலா 12½யும் வான் பயிரும் வடலிகளும் வீடுகளும் செய்பயிர்களும் கிணறும்.

எல்லை—கிழக்கு கை ஒழுங்கை—வடக்கு சங்கரப்பிள்ளை பெண் சின்னம்மாவின் ஆதனம். மேற்கு சின்னப்பொடி காத்திகேசுவின் ஆதனம் தெற்கு றோட்டு பதிவு K 69/170 இடக்கதும்.

வீ. செல்லத்துரை
கொம்மிஷனர்
5-3-36.

சரசாலை தற்போது நீர்வேலி குடி பூதத்தம்பி சின்னத்தம்பி—வழக்காளி.

V.S

நீர்வேலி கந்தையா கைம் பெண் அன்னப்பிள்ளை— எதிராளி.

(Mis 295 12 3-36.)

## பேசல் மிஷன் கலிக்கற்ஓடுகள்

கீர்த்திபெற்ற இந்த ஓடுகளின் விலைகள் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஓடுகள் தேவையானோர் வேறெங்காவது வாங்குவதற்கு முன் தயவுசெய்து எங்கள் ஓடுகளின் விலை விபரத்தை விசாரித்தறியுங்கள்.

இவ்வோடுகள் முதலாவதாகவந்து இன்றும் முதல்நிலையிலேயே நிற்கின்றன.

உவில்லியம் மேதர் அன்சன்ஸ்
தனிஏசன்றர்.

Mis. 297.
12 - 3—6 - 4 - 36.

## மருந்துச் சரக்குகளின்
### விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—00 | 7—00 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கோம்பு களஞ்சஒன்றுக்கு சதம்—50 றுத்தல் ஒன்றுக்கு ரூபா **40**

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக்கர்ப்பூரம், ஜவ்வாது, அரைத்த சந்தனம், சந்தனக்கட்டை, சந்தனவில்லை சாம்பிறாணி பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சாட்டுக் கோடாச் சாக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும், திருச்சி டக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெறவிரும்புவோர், நாலிலொருபாகத்தை முன்பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்."

## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஷ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
**38, 3rd Cross Street, Colombo** **Telephone No. 30.**

(Y. 56. 8-2—7-2-37) வி

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

(Y. 53. 1-1—31-12-36)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 2-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லேசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8ம் கம்டர் காசுக்கடைவீதி வெற்றிவேலு கனகசபை கனகசபை வெப்பிரகாசபிள்ளை & கனகசபை பிரகாசா என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படிசட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:

1934 ம் ஆண்டு 4 ம் மாதம்

| இல. | திக. | ரூ. ச. | நகைகளின்விபரம். |
|---|---|---|---|
| 10435 | 10 | 7 | கைவிலங்கு 1 |
| 10445 | 10 | 6 | பொன்தோடுசோடி 1 |
| 10498 | 11 | 12 | மோதிரம் 1 [டி 1 |
| 10616 | 12 | 10 04 | இமிற்கல் காதோலைசோ |
| 10639 | 14 | 12 | டி. இமிற்கல் பதக்கம் 1 |
| 10669 | 14 | 35 | தக்கப்பவுண் 2 |
| 10678 | 15 | 9 25 | செடிவேலைசெய்த அரைப் பவுண் 1 |
| 10738 | 16 | 20 | உட்கட்டு 1க்கு தட்டு 22 |
| 10747 | 16 | 50 04 | மினுகாப்பு சோடி 1 |
| 10824 | 18 | 20 | செடிக்காப்பு 1 |
| 10950 | 21 | 10 | இமிற்கல்காதோலைசே 1 |
| 10983 | 21 | 10 04 | இமிற் கல் கலாவரைகுச்சு சோடி 1 |
| 11103 | 24 | 13 04 | மோதிரம் 1 |
| 11170 | 26 | 12 | குவளைக் கடுக்கன்சோடி 1 ச. இ. |
| 11249 | 29 | 6 10 | வெள்மட்ட மணி 32 |
| 11269 | 29 | 11 | இமிற்கல் கடுக்கன்சோ 1 |
| 11300 | 30 | 5 50 | புருத்தாலி 1 |

1934 ம் ஆண்டு 5 ம் மாதம்

| | | | |
|---|---|---|---|
| 11449 | 4 | 22 64 | பத சவுக்கமணி 1க்கு மணி 21 |
| 11683 | 9 | 10 | பொ.குளன்காப்புசோடி 1 |
| 11766 | 12 | 6 | ரூப்பிக்கடுக்கன் சோடி 1 |
| 11910 | 15 | 5 50 | செருகு தோடு சோடி 1 |
| 11911 | 15 | 50 04 | கோதம்பை வைடமன் காப்பு சோடி 1 |
| 11940 | 16 | 25 | ஒப்பின்காப்பு 1 |
| 12230 | 23 | 10 04 | ஒருகல் செருகு தோடு சோடி 1 |
| 12302 | 26 | 6 | செம்பில் கட்டிய வளையல் 4 பூ 2 இல்லை |
| 12368 | 27 | 31 | ஒப்பின்காப்பு 1 |
| 12369 | 27 | 32 | ஒப்பின் காப்பு 1 |
| 12464 | 29 | 12 | இ. கல் கடுக்கன் சோடி 1 ச. இ. |
| 12502 | 30 | 30 | பொன்தாலிக்கொடி 1 |
| 12533 | 30 | 10 | கூடு 1 |

1934 ம் ஆண்டு 6 ம் மாதம்

| | | | |
|---|---|---|---|
| 12738 | 5 | 16 04 | மோதிரம் 1 |
| 12789 | 6 | 40 04 | சக்கிலி 1 |
| 12797 | 6 | 15 04 | இமிற்கல்கவுத்தோர் 1 |
| 12819 | 7 | 7 | குவளைக்கடுக்கன்சோடி 1 |
| 12868 | 8 | 25 | பொன் கம்பிப் பூராஸ் அட்டியல் 1 |
| 12899 | 9 | 15 | இமிற் கல் காதோலை சோடி 1 |
| 12909 | 9 | 20 | ஒப்பின்காப்பு 1 ச. இ. |
| 12923 | 9 | 80 | செடிவேலை செய்த 20 டலர் நாணயம் 1 |
| 13041 | 12 | 60 | இரண்டுபட்டுச்சக்கிலி 1 |
| 13060 | 12 | 7 | கைவிலங்கு 1 ச. இ |
| 13099 | 13 | 25 | மினுகாப்பு 1 |
| 13118 | 14 | 18 04 | பத பிசற சவுக்கமணிக்கோர்வை 1 |
| 13159 | 14 | 7 | சிறதக்கக்காப்புசோடி 1 |
| 13208 | 16 | 6 04 | கு.லை. அரைப்பவுண் 1 |
| 13249 | 16 | 22 50 | மினுகாப்பு 1 ச. இ. |
| 13390 | 20 | 7 50 | குலை அரைப்பவுண் 1 |
| 13441 | 20 | 15 | முத்துக் கவுத்தோர் 1 |
| 13486 | 22 | 9 | ஒருகல் செருகு தோடு சோடி 1 |
| 13512 | 22 | 10 | இமிற்கல் திருகுபூ 1 |
| 13642 | 25 | 60 | குண்டுச்சக்கிலி 1 |
| 13689 | 26 | 9 | தோடு சோடி 1 கம்பி சுரை இல்லை |
| 13734 | 27 | 70 | டி. என். சக்கிலி அட்டியல் 1 |
| 13808 | 30 | 6 | நீலக்கல்மோதிரம் 1 |

1934 ம் ஆண்டு 7 ம் மாதம்

| | | | |
|---|---|---|---|
| 13851 | 1 | 13 | குவளைக்கடுக்கன்சோடி 1 |
| 13981 | 4 | 55 04 | செடிக்காப்பு சோடி 1 |
| 14025 | 4 | 60 | இமிற் பத சக்கிலி அட்டியல் 1 |
| 14077 | 7 | 15 04 | இ கல மோதிரம் 1 |
| 14078 | 7 | 40 | வைடமன் பட்டக் காப்பு சோடி 1 |
| 14137 | 8 | 45 | வைடமன் கல் அட்டியல் 1 |
| 14195 | 10 | 16 04 | பொன் ஸ்ஸ் சக்கிலி அட்டியல் 1 |
| 14381 | 15 | 12 50 | ஒரு கல் செருகு தோடு சோடி 1 |
| 14437 | 16 | 100 | ஒரு பட்டிமோதிரம் 1 |
| 14510 | 18 | 7 04 | இமிற்சிறகவுத்தோர் 1 |
| 14552 | 19 | 25 | இமிற்கல் கோட் பெத்தான் 12 |
| 14565 | 20 | 27 | தக்கக் காப்பு சோடி 1 பூ இல்லை |
| 14596 | 21 | 13 | கூடு 1 |
| 14654 | 22 | 79 04 | செடிக் காப்பு சோடி 1 |
| 14657 | 22 | 65 | இ கல்மாலைப் பதக்கம் 1 |
| 14758 | 25 | 15 | சவடி முகப்புடன்மணி 4 |
| 14803 | 27 | 8 | இமிற்கல் பெண்பிள்ளைக் குச்சு சோடி 1 |
| 14809 | 27 | 16 | தக்கக் காப்பு சோடி 1 |
| 14852 | 27 | 9 | சிற ஒருகல் செருகு தோடு சோடி 1 |

1934 ம் ஆண்டு 8 ம் மாதம்

| இல. | தி. | ரூ. ச. | நகைகளின்விபரம். |
|---|---|---|---|
| 56 | 2 | 6 | சிற திருகுபூ 1 |
| 152 | 5 | 8 | சிறஇமிற்கல்கவுத்தோ 1 |
| 297 | 8 | 12 04 | கலாவரை மோதிரம் 1 |
| 394 | 11 | 8 04 | சிற ஒரு கல் செருகு தோடு சோடி 1 |
| 423 | 12 | 13 | இமிற்கல்பதக்கம் 1 டி. இ |
| 512 | 14 | 20 | தக்க அரைஞாண் 1 கு 1 இல்லை இமிற்கலதிருகுபூ 1 |
| 555 | 15 | 53 68 | முடிச்சுக்குத்தி அட்டி. 1 |
| 616 | 17 | 10 | வெ பாதசரம் சோடி 1 |
| 664 | 18 | 8 04 | இ கல் மோதிரம் 2 அருக் கோல் சோடி 1 |
| 698 | 19 | 8 | கூடு 1 |
| 728 | 20 | 5 50 | வெ பாதசரம் சோடி 1 |
| 789 | 22 | 56 04 | மினுகு காப்பு சோடி 1 |
| 957 | 28 | 12 04 | இமிற்கல்கடுக்கன் சோ 1 |
| 1019 | 30 | 30 04 | பொன் சம்புநாத வளையல் சோடி 1 |
| 1042 | 30 | 170 | இமிற்கல் பத வைடமன் அட்டியல் 1 |

1934 ம் ஆண்டு 9 ம் மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1183 | 4 | 8 | மயிர்மாட்டி சோடி 1 |
| 1202 | 4 | 30 | சிக்களக்காப்பு 1 |
| 1220 | 5 | 10 04 | முகதப் புரோச் 1 முத்து ஒன்று இல்லை. |
| 1254 | 5 | 15 | இமிற்கல கவுத்தோர் 1 |
| 1258 | 6 | 13 04 | தக்கக் காப்பு சோடி 1 பூ 1 இல்லை. |
| 1301 | 8 | 8 | குலை அரை பவுண் 1 |
| 1321 | 8 | 20 | முத்துக் காதோலை சோடி 1 |
| 1344 | 9 | 6 | தக்க காப்பு 1 |
| 1354 | 9 | 8 | இ சிறகவுத்தோர் 1 |
| 1357 | 9 | 65 | முடிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 1425 | 11 | 16 | குவளைக் கடுக்கன் சோடி 1 |
| 1480 | 12 | 20 | டி கல் பதக்கம் 1 |
| 1483 | 13 | 7 | தக்க காப்பு 1 |
| 1561 | 15 | 8 | தோடு சோடி 1 |
| 1565 | 15 | 10 | ஒற்றைக்கல் செருகு தோடு சோடி 1 ச 1 இ |
| 1567 | 15 | 15 04 | கூடு 1 |
| 1645 | 17 | 12 | இமிற்கல் பதக்கம் 1 |
| 1718 | 18 | 60 04 | கொலிசுக் காப்புசோடி 1 |
| 1919 | 24 | 7 | பொன் தோடு சோடி 1 க ச இ |
| 1941 | 24 | 45 | பட்டைக்காப்பு சோடி 1 |
| 1949 | 25 | 23 04 | கலாவரை மோதிரம் 1 இமிகல் பதக்கம் 1 |
| 1958 | 25 | 9 | சிகப்புக்கடுக்கன் சோடி 1 ச இ |
| 1959 | 25 | 30 | உட்கட்டு 1க்கு தட்டு 16 |
| 1993 | 26 | 11 | ஒரு கற் செருகு தோடு சோடி 1 ச 1 இ |
| 2014 | 27 | 32 04 | மோதிரம் 1 |

1934-ம் ஆண்டு 10 ம் மாதம்

| | | | |
|---|---|---|---|
| 2174 | 1 | 60 | வைடமன் கொலிசுக் காப்பு சோடி 1 |
| 2175 | 1 | 20 | வெ கல் கவுத்தோர் 1 |
| 2176 | 1 | 55 | செடிக் காப்பு சோடி 1 இ கல் திருகுபூ 1 |
| 2212 | 2 | 55 | அச்சக்காப்பு 1 இ கல் கவுத்தோர் 1 இகல் புரோச் 1 |
| 2245 | 3 | 18 04 | குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 2302 | 5 | 20 04 | கல் புரோச் 1 |
| 2410 | 8 | 15 | தங்க காப்பு 1 ச இ |
| 2426 | 9 | 12 | தக்ககாப்பு சோடி 1 ச இ |
| 2428 | 9 | 11 | திருகுபூ 1 கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 2471 | 9 | 24 44 | டி இமிற்கல் பதக்கம் 1 கல் 3 இல்லை |
| 2633 | 15 | 6 | சிற திருகுபூ 1 |
| 2643 | 15 | 26 70 | பலவித மணி 92 இ கல் பதக்கம் 1 டி இ |
| 2644 | 15 | 8 | சாமந்திப் பூ 1 |
| 2663 | 16 | 7 | இ கல் கவுத்தோர் 1 காம்பு வெள்ளி 1 |
| 2671 | 16 | 9 | இ கல் கடுக்கன் சோடி 1 ச இ |
| 2726 | 18 | 280 04 | ஒப்பின் காப்பு சோடி 1 தங்கப்பவுனுடன் குலைச் சக்கிலி 1 |
| 2755 | 18 | 20 | தாலித் தட்டு 1க்கு தட்டு 10 குடம் 1 |
| 2810 | 20 | 14 | சவடி முகப்புடன் மணி 14வெ அடுக்குக்காப்புசோடி 1 |
| 2819 | 20 | 5 50 | வெள்மட்ட மணி 29 |
| 2820 | 20 | 8 08 | சவடிமுகப்புடன்மணி 18 |
| 2827 | 20 | 6 | வளையல் 6 |
| 2885 | 21 | 6 | இகல் மோதிரம் 1 |
| 2920 | 22 | 6 | சிற திருகுபூ 1 |
| 2957 | 23 | 10 | குலை பவுண் 1 |
| 3015 | 24 | 25 | இரண்டுபட்டு கைச் சக்கிலி 1 |
| 3040 | 25 | 7 04 | வெ வில்லுக்கடுக்கன் சோடி 1 |
| 3096 | 27 | 15 | இ கல் கவுத்தோர் 1 |
| 3107 | 27 | 15 | கல் இல் மோதிரம் 1 |
| 3113 | 27 | 12 | இ கல் காதோலை சோடி 1 |
| 3170 | 29 | 12 | ஒற்றைக்கல் தோடு சோடி 1 |
| 3213 | 30 | 80 | வைடமன் கொலுசுக் காப்பு சோடி 1 |

விற்பனவு:—1936ம் ஆண்டு யுவவருஷம் பங்குனிமீ 12 ம் திகதிக்குச்சரியான (24-3-36) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிதொடக்கம் ஏபெட்டகை பிறகாலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெர்தீன் கேஸ்தர்,
திரிகோணமலை.

(Mis 289 9 & 12-3-36)

## Notice of Sale of Land.
### காணி விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணடிஸ்திறிக் கோட்டின் 8782 இலக்க வழக்கில் 1936-ம் வருஷம் பங்குனி மீ 2-ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1936-ம் வருஷம் சித்திரை மீ 11-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை சக்திபாதி பரப்பு இல இரை 7 7/8 பனைகளும் வான்பயிர்களும் எல்லைகளில் நிற்கும்வான்பயிர்களில்பங்கும், எல்லை கிழக்கு கார்த்திகேசு கிருட்டினருக்கும் மறுபேரினதும் ஆதனம் வடக்கு கந்தர் சின்னதம்பியினதும் மறுபேரினதும் ஆதனங்கள் மேற்கு ஞானப்பிரகாசம் பெண் இளையபிள்ளையின் ஆதனம் தெற்கு றோட்டு பதிவு H 89/252 இதில் சொரியலாய்ப் பரப்பு நில இலா 5 சம் குளி 11 11/16 தம் அதைச் சேர்ந்தவைகளும்.

வீ. செல்லத்துரை
செக்ஷியஷர்
5 3 36

நீர்வேலி குடி பூதத்தம்பி சின்னத்துரை
—வழக்காளி.

VS

நீர்வேலிகுடி குழந்தைவேலுசிவசம்பு எதிராளி
Mis 296 12-3-36

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி, செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி | (கலம்) | ரூபா 10-00 |
| ½ | ,, | ,, | ,, 5-50 |
| ¼ | ,, | ,, | ,, 3-00 |
| 1 | அங்குலம் | | ,, 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் புலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளை யும் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தூகா, பிதாலு,சாலா முஸ்லி, சப்பேமுதவிலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதாம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டிபான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள்திரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ஐ. தபாற்செலவு பிரத்தியேகம், சிங்கப்பூரினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெகுஜன ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு
Y56 1-1-34 to 31-12-36) இலோன்.

## "இரதி மன்மத" சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள "சித்த" ஔஷதாஸ்ரமம்,
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**

H 208. 1-12-35 to 31-5 36

திறம் தேக்கமரம்   பவுண்மார்க் கோளுக்கி ஓடு.

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சியம் தேக்கமரங்கள் ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள் ரூபா 2-75சதந் தொடக்கம்

### இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை

சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
(Y 57. 1.5-35to30-4 36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

## பத்திரக் கிரயம்.

(முற்பணமாக அனுப்புதல் வேண்டும்.)

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரு. ச. | ரு. ச. | ரு. ச. |
| (சுசாசங்க எல்லைக்குட்பட்ட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
தும்பவித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 12th March 1936